உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

புதன்பொய்கை | சுடர் : 41 கதிர் : 203 | புதன்கிழமை 17 ஜூன் 2026 | ஆனி 03 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2057 | பக்கங்கள் –16 விலை – ரூபா 50

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தில்



# கைது செய்யப்படுவாரா கோத்தாபய ராஜபக்ச?

## தடுத்து நிறுத்துமாறு அவர் நேற்று அவசர மனு

**கொழும்பு, ஜூன் 17**

**உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தன்னைக் கைதுசெய்வதைத் தடுத்து நிறுத்துமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.**

»15

நாளைமறுதினம்

## செம்மணிப் புதைகுழிக்கு வருகின்றார் நீதியமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 17
செம்மணிப் புதைகுழி அகழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்காக நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தலைமையிலான குழுவினர் நாளை

»15



## செம்மணிப் புதைகுழிக்குள் மேலும் 6 என்புத்தொகுதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து நேற்று மேலும் 6 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

»15

## முன்னாள் போராளிகள் திடீர்ச்சாவு ஊசிகள் ஏற்றப்பட்டமை காரணமா?

### ஆராயக்கோரிய பிரேரணைக்கு கரைச்சி பிரதேசசபை அனுமதி

கிளிநொச்சி, ஜூன் 17
முன்னாள் போராளிகளின் மர்மச் சாவுக்கு, மறுவாழ்வு மையங்களில் அவர்களுக்கு ஏற்றப்பட்ட ஊசிகள் தான் காரணமா? எனக் கண்டறிய நடவடிக்கை எடுப்பதாக கரைச்சி பிரதேசசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
மறுவாழ்வு மையங்களில் முன்னாள் போராளி

»15

சங்கானை

## சிவப்பிரகாச மகா வித்தி. கல்லூரியாகத் தரமுயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 17
சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் கடந்த 4ஆம் திகதிமுதல் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டு சங்கானை சிவப்பிரகாச இந்துக் கல்லூரி எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.
வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்

»15

## யானை – தொலைபேசி இணைவது உறுதி

கொழும்பு, ஜூன் 17
ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் விரைவில் இணையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»15

## புதிய தலைமுறையிடம் பெரமுனவின் அரசியல்!

### நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 17
அரசியல் பயணத்தை அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்

»15



"தனக்கு தனக்கு எண்டா கோத்தாவுக்கும் படக்கு படக்கு எண்டு அடிக்குமாம்..."

## அரசியலமைப்பு விடயத்தில் மௌனமாயிருப்பது ஏன்?

### ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி



கொழும்பு, ஜூன் 17
புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் என வழங்கப்பட்ட வாக்குறுதி தொடர்பில் அரசாங்கம் மௌனமாய் இருப்பது ஏன்? என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-
பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, புதிய சட்டம் கொண்டுவரப்படும்

»15

பணச்சுத்திகரிப்பு விவகாரம்

## யோஷிதவின் மனுமீது ஜூலையில் கட்டளை!

விரிவு பக்கம்:- 15

## போதைப்பொருள் கடத்தல் சந்தேகநபரொருவர் கைது!

விரிவு பக்கம்:- 15

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 16.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4462 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 02 19 42 63 |
| விசேட எழுத்து | N |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 16.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1529 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 14 27 37 60 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 16.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0488 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 7 6 0 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 16.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2568 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 13 20 65 69 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 16.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6220 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 1 6 8 0 2 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 16.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2250 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 61 70 72 74 |
| விசேட எழுத்து | X |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 16.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0336 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 19 41 54 |

# 'எல்- நினோ' வறட்சியை எதிர்கொள்ள தயார்நிலையில் திணைக்களங்கள்!

## அரசாங்கம் தெரிவிப்பு

**கொழும்பு,ஜுன் 17**

**நாட்டில் வரவிருக்கும் காலப்பகுதியில் ஏற்படக்கூடிய கொடிய 'எல் நினோ' காலநிலை மாற்றம் மற்றும் அதனால் உருவாகக்கூடிய கடுமையான வறட்சி, குடிநீர் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காக அரசாங்கம் அனைத்துப் பிரிவுகளையும் முழுமையாகத் தயார்படுத்தியுள்ளது என்று வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனங்களையும் ஒன்றிணைத்து முதற்கட்டக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், ஜனாதிபதி இந்த நிறுவனங்களின் பிரதானிகளை நேரில் அழைத்து, அவர்களின் தற்போதைய தயார்நிலை மற்றும் அவசரமாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இந்த விழிப்புணர்வுத் திட்டத்தின் மூலம், இலங்கையின் எந்தெந்தப் பகுதிகளில், எந்தெந்தக் காலப்பகுதியில் கடுமையான நீர் பற்றாக்குறை ஏற்படலாம் என்பது துல்லியமாகக் கணிக்கப்பட்டு, அதற்கேற்ப உள்ளூர் அதிகாரிகள் முன்கூட்டியே தயார்படுத்தப்படுவர்.

எல் நினோ வறட்சியால் ஏற்படக்கூடிய இந்த அனர்த்தச் சூழலை மிகவும் திறம்பட எதிர்கொள்வது குறித்து, சம்பந்தப்பட்ட அனைத்துத் திணைக்களங்களும் தங்களின் எழுத்துபூர்வமான அவசரக்கால விசேட திட்டங்களைத் தயாரித்து வருகின்றன.

வறட்சி காரணமாகப் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும், விவசாய மற்றும் குடிநீர் விநியோகக் கட்டமைப்புகளும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதே இந்த முற்காப்பு நடவடிக்கைகளின் பிரதான நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 16.06.2026 | செவ்வாய்க்கிழமை | 0928 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| O | 0 2 9 9 7 4 |

## Super Ball

| திகதி | தினம் |
|---|---|
| 16.06.2026 | செவ்வாய்க்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 3194 | S | 22 38 48 70 |

## சனிதா

| திகதி | தினம் |
|---|---|
| 16.06.2026 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| W | 02 07 25 80 | 5355 |

## SASIRI

| திகதி | தினம் |
|---|---|
| 16.06.2026 | செவ்வாய்க்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 1024 | 01 05 49 |

## லக்ன ராசி

| திகதி | தினம் |
|---|---|
| 16.06.2026 | செவ்வாய்க்கிழமை |

| கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 28 29 38 49 | 4906 |

## KAPRUKA

| திகதி | தினம் |
|---|---|
| 16.06.2026 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| U | 03 | 29 32 43 66 | 2370 |

## அத கோடிபதி

| திகதி | தினம் |
|---|---|
| 16.06.2026 | செவ்வாய்க்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| N | 01 16 49 75 | 3020 |

# குடிதண்ணீர்ப் போத்தல்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்!

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு,ஜுன் 17

நாட்டில் விற்பனை செய்யப்படும் குடிநீர்ப் போத்தல்களுக்கான விலைகளில் நிலவும் முறைகேடுகளைத் தவிர்த்து அவற்றுக்கு முறையான கட்டுப்பாட்டு விலையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான புதிய தேசியக் கொள்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக வீடமைப்பு, மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார். தற்போது சந்தையில் 500 மில்லிலீற்றர் அளவிலான குடிநீர்ப் போத்தல்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பாக இரவுநேர உணவகங்கள் பேருந்துகள் மற்றும் புகையிரதங்களில் பொதுமக்களிடம் அதிக விலை வசூலிக்கப்படுவதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

புதிதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்தத் தேசிய குடிதண்ணீர் விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கையின்மூலம், நுகர்வோருக்கு நியாயமான விலையில் குடிதண்ணீர் கிடைக்கப்பெறும். விலையை உயர்த்தும் நிறுவனங்கள் முறைப்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது-என்றார். - (ச-இ)



# துப்புக்கொடுத்தவர் வெட்டிப் படுகாயம்

கொழும்பு,ஜுன் 17

கரந்தெனிய பகுதியில் விவசாயி ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் பற்றி பொலிஸாருக்கு குறித்த விவசாயி தகவல் அளித்துள்ளார். போதைப்பொருள் வழக்கில் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை பெற்ற சந்தேகநபர். கோபத்தின் காரணமாக இந்தத் தாக்குதலை நடத்தியதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# ஆசனப்பட்டிச் சட்டம் இம்மாதம் நடைமுறை



கொழும்பு,ஜுன் 17

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் ஆசனப்பட்டிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தேசிய வீதி பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் அனைத்து வாகனங்களிலும் ஆசனப்பட்டி அணிவது கட்டாயம்.

வாகனங்களின் முன்பக்கத்தில் மாத்திரமன்றி, பின்பக்க ஆசனங்களில் பயணிக்கும் பயணிகளும் ஆசனப்பட்டி அணிவதைக் கட்டாயமாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்த நிலையில், அந்தச் சலுகைக் காலம் எதிர்வரும் 19ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இதற்கமைய, ஜுன் மாதம் 20ஆம் திகதி முதல் இந்தச் சட்டம் கட்டாயமாக்கப்படும் என்று என தேசிய வீதி பாதுகாப்புச் சபையின் தலைவர் மஞ்சுள குலரத்ன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# ரெலோவின் தலைவராக மீண்டும் செல்வம் எம்.பி.

வவுனியா,ஜுன் 17

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். ரெலோவின் 12ஆவது தேசிய மாநாடு வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது புதிய நிர்வாகத்தெரிவு இடம் பெற்றது. கட்சியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளராக கோவிந்தம் கருணாகரன், உபதலைவராக சுரேன் குருசாமி, நிதிச்செயலாளராக க.விஜிந்தன், நிர்வாகச் செயலாளராக நித்தியானந்தன், இளைஞரணிச் செயலாளராக பிரபாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து தலைமைக்குழு மற்றும் மத்தியகுழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (க-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கௌரவமானதுறையாக வீட்டுப்பணி அங்கீகரிப்பு

அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு,ஜூன் 17

**வீட்டு வேலைகளை ஒரு முறையான வேலைத்துறையாக அங்கீகரித்து, தொழிலாளர் உரிமைகளை வலுப்படுத்துவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் அமைச்சு தெரிவித்துள்ளது.**

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பணியாற்றும் இலங்கை வீட்டுப்பணியாளர்கள், குழந்தை மற்றும் முதியோர் பராமரிப்பு, வீட்டு நிர்வாகம் போன்ற இன்றியமையாத சேவைகளை வழங்குவதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இத்தகைய தொழிலாளர் களின் உரிமைகளை உறுதிப்படுத்தவும், நவீன மற்றும் உள்ளடக்கிய பணிச்சூழலை உருவாக்குவதற்காக சட்டங்களில் திருத்தங்களைப் பரிந்துரைக்கவும் தொழிலாளர் அமைச்சின் செயலாளரின் தலைமையில் நிபுணர் குழுவொன்று ஏற்கனவே நியமிக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இலங்கையில் வீட்டுப் பணியாளர்கள் தொடர்பாக தற்போதும் நடைமுறையில் உள்ள சட்டங்கள் சுதந்திரத்தி ற்கு முற்பட்ட காலத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டவையாகும்.

காலாவதியான சட்டங்களை மாற்றி, வீட்டுப் பணியாளர்களுக்கு முறையான சட்டப்பாது காப்பை வழங்கவேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## தங்கக் கடன் விதிமுறைகள் வணிக வங்கிகளைப் பாதிக்காது

பிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 17

இலங்கை மத்திய வங்கி தங்கக் கடன்களுக்கான விதிகளை இறுக்கமாக்கியிருப்பதனால், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மீது ஏற்படும் தாக்கங்கள் பெரும்பாலும் கையாளக்கூடிய அளவிலேயே இருக்கும் என பிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் தங்கத்தால் பிணையுறுதி அளிக்கப்பட்ட கடன் வசதிகளின் பெறுமதிக்கான கடன் உச்சம் 70 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டிருப்பதுடன், மோட்டார் வாகனங்களுக்காக வழங்கப்படும் கடன் வசதிகளின் பெறுமதிக்கான கடன் உச்ச வரம்பு 10 சதவீதத்தினால் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய விதிகள் காரணமாக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மீது ஏற்படும் தாக்கங்கள் பெரும்பாலும் கையாளக்கூடிய அளவிலேயே இருக்கும். 'தங்கக் கடன்களுக்கான தேவைப்பாடு குறைவாக இருப்பதனால், வங்கிகள் மீதான தாக்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கும். மேலும் வங்கிகளில் மூலதன விகிதங்களில் சிறியளவிலான தாக்கமே ஏற்படும்-என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## உலகத் தரத்துக்கு உயர்கின்றது கட்டுநாயக்க விமானநிலையம்

கொழும்பு,ஜூன் 17

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை சர்வதேசத் தரத்துக்கு விரிவுபடுத்துவதற்கான விசேட அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அண்மைக்காலமாக இலங்கைக்கு வருகை தரும் மற்றும் வெளியேறும் சர்வதேசப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதால், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த விசேட அபிவிருத்தித் திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ், தற்போது பயன்பாட்டிலுள்ள முதலாவது முனையத்தை விரிவுபடுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இரண்டாவது முனையத்தின் கட்டுமானப் பணிகள் நடப்பு ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ச-இ)

## 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து ஓட்டோ விபத்து

கொழும்பு,ஜூன் 17

அதிவேகமாக பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது சுமார் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளாகியுள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தலவாக்கலை நோக்கிச்சென்றுகொண்டிருந்த போதே, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானது. விபத்தில் சாரதி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)




## சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்க ஜூன் 30 வரை காலஅவகாசம்

கொழும்பு,ஜூன் 17

எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிகாரிகள் தங்களது வருடாந்த சொத்து மற்றும் பொறுப்பு விபரப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது. அந்தத் திகதிக்கு முன்னர் சொத்து மற்றும் பொறுப்பு விபரங்களைச் சமர்ப்பிக்கத் தவறுபவர்கள் கட்டாயமாக அபராதத்துக்கு உள்ளாக்கப்படுவார்கள். இது தொடர்பான மேலதிக விவரங்களை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் 1954 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## ஏன் இழுபறி?–3


'கிளிநொச்சிப் பாட்டுக்காரப் பெடியனைக் கைது செய்தது பயங்கரவாதத் தடைச்சட்டத்தில இல்லை' எண்டு குற்றப்பத்திரிகையில மாத்தோனும் எண்டு முடிவெடுத்ததுக்குக் காரணம் அரசாங்கம் இல்லை. எல்லா இடத்தாலயும் கடும் பிரசர். அதைச் சமாளிக்கேலாமல் தான் இந்த முடிவுக்கு அரசாங்கம் இறங்கி வந்தது. எண்டாலும் விழுந்தும் மீசையில மண் படேல எண்டு காட்டுறதுக்காக, இந்தத் தோல்வியை தங்கட அரசியல் ஆதாயமாக்கிறதுக்கு திசைகாட்டிக்காரர் நினைச்சினம்.

ஏற்கனவே இந்த விசயத்தில வீட்டுக்கட்சியில இருக்கிற சட்டாம்பியார் குரூப்பும், வாத்தியார் குரூப்பும் கிளிநொச்சிப் பாட்டுக்காரரை விடுவிச்சு தாங்கள் பேரெடுக்கோனும் எண்டு கயிறுமுத்துக்கொண்டு நிண்டவை. சட்டாம்பியார் குரூப் பாட்டுக்காரப் பெடியனுக்காக நீதிமன்றத்தில வாதாடிக்கொண்டிருந்தவை. வாத்தியார் குரூப் நேர ஜனாதிபதியோட கதைச்சு அவரை விடச்சொல்லி கோரிக்கை வைச்சவை. இப்பிடி ரண்டுபேரும் 'நீ பெரிசோ,நான் பெரிசோ?'எண்டு தங்களுக்குள்ள வீரம் காட்டிக்கொண்டிருக்கேக்க, நசுக்கிடாமல் திசைகாட்டிக்காரர் காய் நகர்த்தி, பெடியன்ர தாயோட கதைச்சு அவாவை தங்கட பக்கம் கொண்டந்திட்டினம். இதொண்டும் தெரியாத வீட்டுக் கட்சியின்ர சட்டாம்பியார் குரூப்பின்ர சாவகச்சேரி லோயர் கோர்ட்ஸுக்குப் போக, அங்க 'பயங்கரவாதத் தடைச்சட்டத்தில கைதுசெய்தது எண்டதை சட்டமா அதிபர் விலக்கிட்டார்' எண்டுபொலிஸ்காரர் சொல்லியிருக்கினம். இதைப்பற்றி தீர்ப்புக் குடுக்க திரும்ப நீதிமன்றம் கூடேக்குள்ளதான் ஒரு ருவிஸ்ட். 'என்ர மகனுக்காக இனிமேல் இவைதான் வாதாடுவினம்' எண்டு திசைகாட்டி லோயர்மார் ரண்டுபேரை பாட்டுக்கார பெடியன்ர தாய், நீதிமன்றத்துக்கு அறிவிக்க, சாவகச்சேரி லோயருக்கு என்ன செய்யிறதெண்டு தெரியாமல் போட்டுது. எண்டாலும் 'பிணை தொடர்பா நான் எல்லாம் சமர்ப்பணம் செய்திட்டன். இனி நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லவேண்டியதுதான்'எண்டு அவர் சமாளிச்சார். இவ்வளவுதூரம் தான் கஷ்டப்பட்டு வாதாட, முடிவுக்கட்டத்தில ரண்டுபேர் வந்து பேர் எடுத்துக் கொண்டு போறதெண்டால் அவரால தாங்கேலாது தானே.

பிறகும் ஒரு திருப்பம். இந்த வழக்கில பயங்கரவாதத் தடைச்சட்டதில பிடிச்ச விசயத்தை விலக்கிட்டம் எண்டு சொல்லி சட்டமா அதிபரின்ர கடிதம் கோர்ட்ஸுக்கு வந்து சேரேலை. அப்பிடி வந்தால் தான் அதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும். அதால 17 ஆம் திகதி புதன்கிழமைதான் பிணைக்கு விண்ணப்பிக்கலாமெண்டு நீதிமன்றம் சொல்லி வழக்கை ஒத்திவைச்சிட்டுது. எண்டாலும் திசைகாட்டிக்காரர் விடேலை. மேல்மட்டங்களோட போனில கதைச்சு, சட்டமா அதிபர் நீதிச்சேவைகள் ஆணைக் குழுவுக்கு அறிவிச்சு, திரும்ப நீதிமன்றம் கூடினது. அப்ப திசைகாட்டி லோயர்மார் சட்டமா அதிபரின்ர கடிதத்தின்ர கொப்பியை நீதிமன்றத்துக்குக் காட்ட, அதுக்குப் பிறகுதான் பிணை கிடைச்சது. வீட்டுக்கட்சி லோயருக்கும் அந்தக் கடிதத்தின்ர கொப்பியை முதலே திசைகாட்டிக்காரர் போனில அனுப்பி இருந்தால் இவ்வளவு சில்லெடுப்பு வந்திருக்காது. வெள்ளிக்கிழமை முதல்தரம் நீதிமன்றம் இந்த வழக்கை எடுக்கேக்கையே பிணை கிடைச்சிருக்கும். ஆனால் குட்டையைக் குழப்பி அதில அரசியல் ஆதாய மீன் பிடிக்கோனும் எண்டு நினைச்சு, அதில திசைகாட்டிக்காரர் வெண்டும் போட்டினம். எண்டாலும் அந்தப் பாட்டுக்காரப் பெடியனுக்குத்தான் கெட்டபேரை வாங்கிக் குடுத்திட்டினம். உண்மையில அது அந்தப் பாட்டுக்காரப் பெடியன்ர பிழையில்லை, எல்லாப் பிழையும் திசைகாட்டிக்காரரின்ர தான். பழி ஓரிடம், பாவம் வேறிடம் கண்டியளோ!

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய கொடியேற்ற நிகழ்வின் போது, ஆலயத்திலிருந்து அம்பாளின் உருவப்படம் அமுதசுரபி அன்னதான மடத்துக்குப் பக்திபூர்வமாக எடுத்துச் செல்லப்பட்டது. (க-17)

# வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 17

நாயன்மார்கட்டு பாரதி மன்றம் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு பவளவிழாவை முன்னிட்டு, நல்லூர்ப் பிரதேசசபை கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 26, 27, 28ஆம் திகதிகளில் சிவசுப்பிரமணியம் நினைவு பெண்கள் விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறும். (க)

# குருபூசை

கிளிநொச்சி, ஜூன் 17

ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் 36ஆவது குருபூசை, கிளிநொச்சி மாகாதேவ ஆச்சிரமத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

# ஒன்றுகூடல்

கொழும்பு, ஜூன் 17

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இசைநாடகத்தில் நவரசங்கள் 'இசையோடிணைந்த உரை அரங்கம்' நிகழ்வு கல்விக்குழுச் செயலாளர் கலாநிதி எஸ். ஸ்ரீபிருந்திரன் தலைமையில் நடைபெறும். (க)


# மன்னெழில் மலருக்கு ஆக்கங்கள் கோரல்!

மன்னார், ஜூன் 17

மன்னார் மாவட்டச் செயலகமும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வெளியிடும் 'மன்னெழில்' மலரின் நான்காவது இதழுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

'மன்னாரின் தொல்லியல்சான்றுகள்', 'மன்னாரின் சமகால இலக்கியப் படைப்புகளும் படைப்பாளர்களும்', 'மன்னாருக்கே உரித்தான வாசாப்புக்களும் அவற்றின் சிறப்புகளும்', 'மன்னார் மாவட்டத்தின் பெருமைபேசும் தொழில் பாடல்கள்', 'மன்னாரின் கூத்துகளும் அவற்றின் வளர்ச்சிப்போக்கும்', 'மன்னாரின் சிற்ப ஓவியத்துறை வளர்ச்சியும் அவற்றின் போக்கும்', 'மன்னாரின் நாவல் சிறுகதை வளர்ச்சி' ஆகிய தலைப்புகளில் பொருத்தமான ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கலாம். ஆக்கங்கள் அனைத்தும் ஏ4 தாளின் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதவாறு பொருத்தமான விளக்கப்படங்களுடன் தட்டச்சு செய்யப்பட்டு எதிர்வரும் ஜூலை மாதம்முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ATTALMANNAR@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

ஆக்கங்களை மின்னஞ்சலில் அனுப்பிவைப்பதில் இடர்பாடு இருப்பின் 'மலராசிரியர் மன்னெழில் மாவட்டச் செயலகம் மன்னார்' என்ற முகவரிக்கு தபாலிலும் அனுப்பலாம். மேலதிக விபரங்களுக்கு சிவஸ்ரீ மகா தர்மகுமாரக் குருக்கள் 0775890091 (மலராசிரியர்) மற்றும் நித்தியானந்தன் 0775342441 (சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் மலர்க்குழு உறுப்பினர்) ஆகியோருடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-60)



# டிறிபேர்க் கல்லூரியில் வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 17

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில், தென்னருவி வர்த்தகக் கண்காட்சியும், தொழிற்சந்தையும், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கண்காட்சியை வட மாகாண கல்விப்பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன் ஆரம்பித்துவைத்தார். வட மாகாண கல்வித் திணைக்கள வர்த்தக பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. சுபாகரன், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் அ. கயிலாயப்பிள்ளை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். இரு நாள்கள் இந்தக் கண்காட்சி நடைபெற்றது. (க)



யாழ்ப்பாணம் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் தேர்ப்பவனி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. s(க)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாளாக இருக்கும். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம்.

**இடபம்:** உற்சாகம் மிகுந்த நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும். தாய்மாமன் வழியில் சுபச் செய்தி வரும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன்–மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். தாயின் உடல் நலனில் கவனம்தேவை. எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்புக் கரைவதுடன் கடனும் வாங்க நேரிடும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல்நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். தந்தை வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# காலத்தின் கோலம்

இலங்கை அரசியல் வரலாற்றில் 'சர்வ வல்லமை பொருந்திய சக்தி' என்ற சொல்லாடலுக்கு மிகப் பொருத்தமான உதாரணமாக விளங்கியவர்கள் ராஜ பக்சக்கள். முழு அரச இயந்திரத்தையும் தங்களது கட்டளைப்பீடமாகக் கொண்டு, எவராலும் அசைக்க முடியாத பலத்துடன் கொடிகட்டிப் பறந்த ஒரு குடும்பத்தின் பின்னணியில் இருந்து வந்தவர் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. ஆனால், இன்று அவரே பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தன்னைக் கைதுசெய்வதைத் தடுக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி யுள்ளார். ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் நிமித்தம் அவர் தாக்கல் செய்துள்ள இந்த மனு, இலங்கை அரசியலில் காலத்தின் கோலம் எவ்வளவு விசித்திரமானது, அதே வேளை எவ்வளவு நீதியானது என்பதை உணர்த்துகிறது.

அன்று எவராலும் அசைக்கமுடியாத ஜனாதிபதியாக இருந்த ஒருவர், இன்று பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு நீதிமன்றத்தை நாடியிருப்பது ஒரு வரலாற்று முரண்நகை. அதிகாரத்தில் இருக்கும் போது அப்பாவிகளுக்கு-தமிழ் மக்களுக்கு-எதிரான ஆயுதமாக எந்தச் சட்டத்தைப் பயன்படுத்தினார்களோ, இன்று அதே சட்டத்தின் நிழலைக் கண்டு அஞ்சும் நிலைக்கு ராஜபக்சக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். காலச்சக்கரம் சுழலும் போது தர்மத்தின் தீர்ப்பிலிருந்து எவரும் தப்பமுடியாது என்பதற்கு இதுவொரு மிகச்சிறந்த சான்றாகும்.

முன்னாள் ஜனாதிபதியின் இந்த நீதிமன்ற நாட்டம், ஒருபுறம் அவரது சட்டரீதியான தற்காப்பு உரிமையாகத் தெரிந்தாலும், மறுபுறம் அது தற்போதைய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சுயாதீன நகர்வுகளையும், விசாரணைகளின் தீவிரத்தன்மையையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அதிகார நாற்காலிகளைப் பிடிப்பதற்கும், அதைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் சாமானிய மக்களின் உயிர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்திய எவரும், தங்களுக்கான தண்டனையிலிருந்து தப்பமுடியாது என்ற உண்மையை இந்த நிகழ்வு உரக்கச் சொல்கிறது. அதிகாரத்தில் இருக்கும் போது சட்டத்தை வளைத்தவர்கள், இன்று அதே சட்டத்தின் ஓட்டைகளுக்குள் ஒளிந்துகொள்ள நினைப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இனிமேலும் அரசியல் காரணங்களுக்காகவோ, அதிகாரப் பாதுகாப்பிற்காகவோ அல்லது அரசியல் 'டீல்' களுக்காகவோ ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் மழுங்கடிக்கப்படக் கூடாது -அவ்வாறான சம்பவங்கள் இனி இலங்கையின் வரலாற்றில் நடக்கக்கூடாது. நூற்றுக்கணக்கான சாமானிய மக்களின் கண்ணீருக்கும், உயிரிழந்தவர்களுக்கும் உண்மையான நீதி கிடைக்கவேண்டும். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் நிறுவனங்களும், தற்போதைய ஆட்சியாளர்களும் இதைத் தங்களின் முதன்மைக் கடமையாகக் கொள்ள வேண்டும். ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள், அதற்குத் துணை நின்றவர்கள் மற்றும் அரசியல் இலாபங்களுக்காக அதனைப் பயன்படுத்தியவர்கள் எவராயினும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தங்களின் பாவங்களுக்குப் பொறுப்புக் கூறும் நாள் வரவேண்டும். அப்போதுதான் இந்நாட்டு மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிக்கு உண்மையான பரிகாரம் கிடைக்கும். சட்டம் தன் கடமையைச் செய்யும் என்ற நம்பிக்கையை இந்த நீதிமன்ற நகர்வுகள் மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.






## பொய்யாமொழி

**எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி**

**பொருள்:** இச் செயல் எளியது என எண்ணிப் பிறனுடைய மனைவியிடம் நெறிதவறிச் செல்கின்றவன், எப்போதும் அழியாமல் நிலைநிற்கும் பழியை அடைவான்.



# ஐ.நா. சித்திரவதைத் தடுப்பு உபகுழு இலங்கை வருகை

## வெலிக்கடைக்குக் களப்பயணம்

**கொழும்பு, ஜீன் 17**

**இலங்கையில் தடுப்புக்காவலில் உள்ள கைதிகளின் பாதுகாப்பு மற்றும் சித்திரவதைகளைத் தடுப்பதற்கான தேசிய பொறிமுறைகளை மதிப்பீடு செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைத் தடுப்பு உபகுழுவின் உயர்மட்டப் பிரதிநிதிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.**

சுமார் 7 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை வந்துள்ள இந்தக் குழுவினர், தங்களது கண்காணிப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்கு விசேட களவிஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர். இந்த ஐ.நா. தூதுக்குழுவினர் எதிர்வரும் ஜீன் 24ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இதன்போது அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் விரிவான கலந்துரையாடல்களையும் முன்னெடுக்கவுள்ளனர். (ச-இ)



## சுற்றுலாவிகள் ஐவர் கைது!

கொழும்பு, ஜீன் 17

யால தேசிய சரணாலயத்தினுள் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டங்களை மீறி, வாகனங்களிலிருந்து இறங்கி நடந்து சென்ற ஐந்து வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வனவிலங்குச் சட்டங்களை மீறியமை மற்றும் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் குறித்த ஐந்து வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## கடற்கொந்தளிப்பு

கொழும்பு, ஜீன் 17

காலி முதல் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்பதுடன், அந்தக் கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, கடற்சார் மற்றும் மீனவச் சமூகங்கள் இதுகுறித்து அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச-இ)

## ஆடை ஏற்றுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜீன் 17

இலங்கையின் ஏற்றுமதித் துறைகளில் ஒன்றான துணி மற்றும் ஆடைத் துறையின் ஏற்றுமதி வருமானம், இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2026 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில் துணி மற்றும் ஆடை ஏற்றுமதி வருமானம் 1,624.7 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. (ச-இ)



## முதல் காலாண்டில் பொருளாதாரம் வளர்ச்சி

கொழும்பு, ஜீன் 17

2026ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் இலங்கைப் பொருளாதாரம் 5.1 வீதமாக சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


குறித்த காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தின் பிரதான மூன்று துறைகளான விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய அனைத்துத் துறைகளும் சாதகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

இதன்படி, விவசாயப் பொருளாதார நடவடிக்கைகள் 1.1% ஆகவும், கைத்தொழிற்றுறை 7.2% ஆகவும் மற்றும் சேவைத்துறை 3.4% ஆகவும் வளர்ச்சியடைந்துள்ளன. (ச-இ)



நாளை
வியாழக்கிழமை-ஆனி 04
18.06.2026
சுபநேரம் : 07.23 - 08.53
ராகுகாலம் : 01.23 - 02.53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வீட்டுத்திட்ட வீடுகளை அமைக்கும்போது அதிகாரிகளின் கண்காணிப்பு அவசியம்

## பிரதி அமைச்சர் சரத் தெரிவிப்பு

முல்லைத்தீவு,ஜூன் 17
எவ்வித பக்கச்சார்புகளுமின்றி வீட்டுத்திட்டங்களை வழங்கி, வீடுகள் அமைக்கும் போது, அவற்றை அதிகாரிகள் பரிசீலனை செய்வதுடன், ஒவ்வொரு கிராம பிரஜாசக்தி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனும் மேற்பார்வை செய்யப்படவேண்டும் என்று தேசிய வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் ரீ.பீ.சரத் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தின் வீட்டுத்திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அரியாத்தை மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், களுத்துறை மாவட்டத்துக்கு வழங்க வேண்டிய 100 வீடுகளை, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விடுவித்துள்ளோம். மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் வீடுகளை அமைக்கவேண்டும். இதற்கு அதிகாரிகளின் கண்காணிப்பும் அவசியம்- என்றார். (க-55)

# நெல்லைச் சந்தைப்படுத்த விவசாயிகள் பெரும் இடர்

முல்லைத்தீவு, ஜூன் 17
முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் நெல்லைச் சந்தைப்படுத்த முடியாது பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுக்காய், கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் சிறுபோக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் விவசாயிகள் தனியாருக்குக் குறைந்த விலைக்கு, நெல்லை விற்பனை செய்ய முடியாது காத்திருக்க வேண்டியுள்ளது. அரசாங்கத்தால் நெல்லுக்கான உத்தரவாத விலை அறிவிக்கப்பட்டு, தற்போதும் நடைமுறையில் உள்ள போதும், தனியார் வியாபாரிகள் மூடைக்கு 5300 ரூபா முதல் 5500 ரூபாவுக்கே கொள்வனவை மேற்கொள்கின்றனர்.
டீசல் மற்றும் விவசாய இரசாயனங்களின் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால், நெல்லுக்கான உற்பத்திச் செலவு இம்முறை பன்மடங்காக அதிகரித்துள்ள நிலையில், சிறுபோக அறுவடையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், நியாயமான விலைக்கு நெல்லை சந்தைப்படுத்தமுடியாது பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர். (க-55)



# தமிழ்ச் சமூகத்திலிருந்து தலைமைத்துவம் மாயம்!

## யாழ்.இந்து அதிபர் ஆதங்கம்

யாழ்ப்பாணம்.ஜூன் 17
இன்று தமிழ்ச் சமூகத்தில் நல்ல தலைமைத்துவங்களுக்கான இடைவெளி அதிகரித்துள்ளது. அந்த இடைவெளியைக் குறைத்து, தற்போது இருக்கின்ற இளைய சமுதாயத்தை நல்ல தலைவர்களாக மாற்ற வேண்டிய பொறுப்பு எம்மிடமுள்ளது என்று யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் ரட்ணம் செந்தில்மாறன் தெரிவித்துள்ளார்.
எங்கட புத்தகங்கள் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மூத்தோர் ஒன்றுகூடல் நிகழ்வு, கோண்டாவில் சந்திக்கருகில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், மாணவர்களை வளமான ஒரு தலைமைத்துவப் பாங்குள்ள வினைத்திறனுடையவர்களாக மாற்றக் கூடிய ஒரே ஒரு இடம் பாடசாலை மட்டும் தான். எனவே மாணவர்களைச் சமூகத்துக்குள் ஒன்றிணைத்து வெற்றிகரமான பிரஜையாகக் கொண்டு வருவதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களைச் செய்ய வேண்டிய நிலையிலிருக்கிறோம்.
30 ஆண்டு காலப்போர் எங்கள் தலைமைத்துவத்தில் பெரிய இடைவெளியைக் கொண்டு வந்துள்ளது. அந்த இடைவெளியை வேகமாக நாங்கள் நிரப்பவேண்டும். இல்லாவிடில் தென்பகுதியுடன் மிகவும் போட்டித்தன்மையை எதிர்கொள்ளமுடியாமலிருக்கும்-என்றார். (க-66)

# சூரியசக்திப் பயன்பாடு யாழில் இருநாள் பயிற்சி




யாழ்ப்பாணம்.ஜூன் 17
சூரியசக்தி மற்றும் மின்சக்தி இணைப்புத் தொடர்பான இருநாள் பயிற்சி, யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில், மாவட்ட மேலதிக செயலர் க.சிவகரன் தலைமையில் நடைபெற்ற பயிற்சியில், பயிற்சியின் நோக்கம் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பாக இழப்பீட்டு அலுவலகத்தைச் சேர்ந்த உதவிப்பணிப்பாளர் அருண் பிரதீபன் விளக்க உரையாற்றினார். சூரியசக்திப் பயன்பாடு, மின்சக்தி இணைப்பு நடைமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (க-66)

# மாகாண கபடிப் போட்டியில் கிளிநொச்சி இந்து சம்பியன்


யாழ்ப்பாணம்.ஜூன் 17
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கபடிப் போட்டியில் இரு பிரிவுகளிலும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் தமதாக்கிக் கொண்டது. வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான கபடிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.
இதில் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பாலிநகர் மகாவித்தியாலய அணி மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. மூன்றாம் இடத்தை முல்லைத்தீவு கோணாவில் மகா வித்தியாலய அணி பெற்றது. 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 34:29 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. மூன்றாம் இடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றுக்கொண்டது. (ச-422)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக யோகா தினத்தை முன்னிட்டு, யாழ்.நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில், யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடப் பாடசாலையில், நேற்று யோகாப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் சிரேஷ்ட விரிவுரையாளர் கேதீஸ்வரன் தலைமையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (க)



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு அம்மன் ஆலயத்தின் இரண்டாம் நாள் காலை திருவிழாவில், சுவாமி நாக பாம்பு வாகனத்தில் வீதி வலம் வந்தார். (க-17)

வவுனியாவில்

# 246 நிரந்தர வீடுகளை அமைக்க ரூ.576 மில்லியன் நிதி ஒதுக்கீடு

வவுனியா, ஜூன் 17

வவுனியா மாவட்டத்தில் இந்த வருடத்தில் 246 நிரந்தர வீடுகளை அமைப்பதற்காக, 576 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று வீடமைப்பு அபிவிருத்தித்திட்டம் குறித்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் பிரதி அமைச்சர் ரீ.பீ.சரத் தலைமையில், வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட டித்வா புயலால் சேதமடைந்த 65 வீடுகளுக்குப் பதிலாக, நிரந்தர வீடுகளை அமைப்பதற்காக, ஒரு வீட்டுக்கு 50 இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பகுதியளவில் சேதமடைந்த வீடுகளின் புனரமைப்பு மற்றும் ஏனைய வீட்டுத் தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. இதில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், மாவட்டச் செயலர் பி.ஏ. சரத்சந்திர, மேலதிக மாவட்டச் செயலர் என். கமலதாசன் மற்றும் வீடமைப்பு அமைச்சின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (க-75)



பருத்தித்துறை பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட சுப்பர்மடம் பொது இந்துமயானம் மற்றும் அதன் சூழல் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. 'தம்பசிட்டி நண்பர்கள்' அமைப்பின் ஒருங்கிணைப்பில் பல்வேறு சமூகமட்ட அமைப்புகள், கிராம இளைஞர்கள் மற்றும் தம்பசிட்டி நண்பர்களின் ஒத்துழைப்புடன் குறித்த பகுதி சுத்தம் செய்யப்பட்டது. (எ-41-100)





# உள்ளூர் முயற்சியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும்

மன்னார், ஜூன் 17

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திக் கண்காட்சியும், விற்பனையும் மன்னார் நகர மத்திய சுற்றுவட்டத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வை, மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். இதில் பல்வேறு தொழில் வழங்குநர்கள் கலந்துகொண்டதோடு, வேலைவாய்ப்புகளுக்காக காத்திருப்பவர்களின் விண்ணப்பங்களையும் பதிவு செய்தனர். நிகழ்வில் பிரதேச செயலர், உதவி மாவட்டச் செயலர் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர். (க-56,213)




# சென்.மேரிஸ் அணி இறுதிப்போட்டிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 17

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்துத் தொடரில், நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில், ஊரெழு பாரதி மற்றும் சென்.மேரிஸ் அணிகள் மோதின. ஆட்ட நேரமுடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் அணி அபார வெற்றி பெற்று, முதல் அணியாகத் தகுதி பெற்றுள்ளது. (க-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 25.05.1960 — மறைவு 18.05.2026

கடந்த 18.05.2026 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குலவிளக்கு


### அமரர் ஞானபாலசிங்கம் சந்திராதேவி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.06.2026) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கோகுல வீதி,**
**கோண்டாவில் வடக்கு.** (CS/61663) J-1 **குடும்பத்தினர்**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 18.09.1949 — மறைவு 16.06.2026

(CS/61676) J-1

### சம்பந்தர் குகமூர்த்தி

**(வைத்தியர் - முறிவு நோவு - நல்லூர்)**

வரணியைப் பிறப்பிடமாகவும், இல.20, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தர் குகமூர்த்தி (வைத்தியர் - முறிவு நோவு நல்லூர்) அவர்கள் நேற்று (16.06.2026) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சம்பந்தர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவாஜினியின் அன்புக் கணவரும், யோகேஸ்வரன் (சூட்டி - வைத்தியர் - முறிவு நோவு நல்லூர்) அன்புத் தந்தையும், அஜிந்தினியின் அன்பு மாமனாரும், ரஞ்சிதமலர், ரவீந்திரன், புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2026) புதன்கிழமை காலை 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மகன் - கு. யோகேஸ்வரன்**
**(வைத்தியர் - முறிவு நோவு - நல்லூர்)**
**20, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**077 874 0462**

## சாரதி தேவை




தங்குமிட வசதி உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**பிரபல கட்டட பொருட்கள் விற்பனையாளர்**
**சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்**
**இல.55,57, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P:077 071 6329**

(CR 47699) A

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 08. பருத்தித்துறை வீதி 4ம் ஒழுங்கை 19 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி. மகாதேவா என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் துரைராஜா இராஜசிங்கம் அவர்கள் 08.10.1961ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சூசைப்பிள்ளை தனபாலசிங்கம் முகதாவில் 3588ம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் குமாரசாமி சிவசோதி பெண் மங்கயற்கரசிக்கு வழங்கியுள்ளார்

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் துரைராஜா இராஜசிங்கம் அவர்கள் 08.10.1961ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சூசைப்பிள்ளை தனபாலசிங்கம் முகதாவில் 3589ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் ஆனைப்பந்தி துரைராஜா ராஜேஸ்வரிக்கு வழங்கியுள்ளார். குறித்த ஆதனம் ஆனைப்பந்தி ஆனைப்பந்தி பருத்தித்துறைவீதி யாழ்ப்பாணம் தற்போது அவுஸ்ரேலியாவில் வசிக்கும் அரசரட்ணம் நிர்மலேந்திரன் நியுசிலாந்தில் வசிக்கும் அரசரட்ணம் சத்தியேந்திரன் மற்றும் அவுஸ்ரேலியாவில் வசிக்கும் கதிர்காமலிங்கம் இந்திரா ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்காரர் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் தாமோதரலிங்கம் கதிர்காமலிங்கம் மூலமும் குறித்த தாமோதரலிங்கம் கதிர்காம லிங்கமும் சேர்ந்து 27.03.2021ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1472ம் இலக்க அறுதி உறுதி மூலம் கந்தையா சுந்தரலிங்கம் பெண் விஜயராணிக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் மாநகர சபை நல்லூர் பிரதேச செயலர் பிரிவு வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை J/105 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள இக்கிரித்தோட்டம் நில.பர 03 குளி 9. இது நில அளவையாளர் T.கந்தையா 25.08.1961ம் திகதி அளந்து தயாரித்த 1008ம் இலக்கப்படத்தில் துண்டு 3 ஆக காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு மூன்று குளி ஒன்பதுக்குரிய எல்லை.

கிழக்கு : ஒழுங்கை
வடக்கு : துண்டு 1 என காட்டப்பட்ட குமாரசாமி சிவசோதி பெண் மங்கயற்கரசியின் ஆதனம்
மேற்கு : துண்டு 2 என காட்டப்பட்ட துரைராஜா இராஜசிங்கத்தின் ஆதனம்
தெற்கு : ஒழுங்கை

இதடங்கலும் செய்பயிர் வான்பயிர்கள் உட்பட இதற்குச்சேர்ந்தவைகளும் வடக்கு எல்லை ஆதனத்தில் உள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்கால் பாவிப்புரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை சுந்தரலிங்கம் பெண் விஜயராணி என்பவர் தனது பெயரை எமது ஆதனப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுந்தரலிங்கம் பெண் விஜயராணி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை.** CR/47688) J-1

## வட மாகாண சபை

### வட மாகாணத்தின் கீழுள்ள வாகன திருத்த நிலையங்களை பதிவு செய்தல் மற்றும் தரப்படுத்தலுக்கான அழைப்பிதழ் - 2026/2027

NP/09/0A&P/08/11/Reg.Gen/2025

1. வட மாகாணத்தின் கீழுள்ள வாகன திருத்த நிலையங்களை தரப்படுத்தலுக்கு ஏதுவாக பதிவு செய்யப்பட்ட வாகன திருத்த நிலையங்கள் மற்றும் ஆர்வமுள்ள வாகன திருத்தகங்கள், மோட்டார் வாகன பழுதுபார்ப்பு நிலையங்கள் மற்றும் வாகன பராமரிப்பு சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட சேவை வழங்குநர்கள் மற்றும் ஆர்வமுள்ள சேவை வழங்குநர்கள் இவற்றுக்கான வழிகாட்டல் ஆவணங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை பிரதிப் பிரதம செயலாளர் - நிதி அலுவலகம், வட மாகாண சபை, A9 வீதி, கைதடி எனும் முகவரியில் 2026 ஜீன் 17 ஆம் திகதி முதல் 2026 ஜீலை 08 ஆம் திகதி வரை அலுவலக வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500.00 இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் பணமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். வழிகாட்டல் ஆவணம் மற்றும் படிவங்கள் தொடர்பான ஏதேனும் விளக்கங்கள் மற்றும் சந்தேகங்களை 021 2213540 தொலைபேசி இலக்கம் மூலம் கேட்கப்படலாம். மேலும், அவை தொடர்பாக திட்டமிடப்பட்ட கலந்துரையாடலின் போது பரிசீலிக்கப்படும்.

3. இது தொடர்பான முன் விளக்க கலந்துரையாடானது 2026 ஜீன் 30 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

4. முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, வடக்கு மாகாணம், A9 வீதி, கைதடி எனும் முகவரிக்கு 2026 ஜீலை 08 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பிரதம செயலாளர்,
வட மாகாண சபை,
A9 வீதி, கைதடி.

(CR/47691) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

17.06.2026
புதன்கிழமை

# புதன் பொய்கை

ஒருவனையும்
நம்பாதவனை
மற்றவர்கள்
எதற்காகவும்
நம்பப் போவதில்லை.

-வில்கி-



# தமிழர் இனப்படுகொலை 'நினைவுத்தூபி'

## 78 ஆண்டுகால இனவழிப்புக்கு நீதி கோரும் படிமம்

இனப்படுகொலைக்கு இலக்கான தாயக மக்களின் நினைவாக நியூ சவுத் வேல்ள் மாநிலத்தில் உள்ள கம்பர்லாண்ட் நகரசபைக்குச் சொந்தமான சிவிக் பென்டிகில் சிவிக் பூங்காவில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி ஒன்று அண்மையில் நிறுவப்பட்டது. இத்தூபி உருவான விதம் குறித்து திருமதி துர்க்கா ஓன் வழங்கிய நேர்காணல் இது.

**நேர்கண்டவர்: ஜெயப்பிரசாந்**

**கே**ள்வி: இந்த நினைவுச்சின்னத்தை தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் என்றா அல்லது முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் என்றா குறிப்பிட வேண்டும். அடுத்துவரும் கேள்விகளில் பெயரைச் சரியாகக் குறிப்பிடுவதற்காகவே இந்தக் கேள்வியுடன் எனது நேர்காணலைத் தொடங்குகிறேன்.

**பதில்:** நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் சிவில் பார்க்கில் ( Civic Park) 'Peace Garden'க்குள் அமைந்துள்ள இந்தச் சின்னத்தின் சரியான பெயர் 'தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம்' என்பதாகும். முள்ளிவாய்க்கால் என்பது தமிழின அழிப்புப் போரின் இறுதிக்கட்டத்தையும், இனப்படுகொலையினை நினைவுபடுத்துவதாகவும் இருக்கும் அதேவேளையில், இந்த நினைவுச்சின்னமானது ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் காலம் காலமாக தமிழர்கள் எதிர்கொண்ட துயரங்கள், அவர்கள் எதிர்நோக்கிய அழிவுகள் மற்றும் இன அழிப்பு மற்றும் மாவீரர்களின் தியாகங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் சின்னமாக இருக்கின்றது. குறிப்பாக, நினைவுப்பலகையில் பொறிக்கப்பட்டுள்ள 'தமிழீழம்' என்ற சொல்லானது எமது அடையாளத்துக்குக் கிடைத்த நிரந்தர அங்கீகாரம் என்றே குறிப்பிடலாம்.

அதனாலேயே இப்படியான நினைவுச்சின்னங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. எங்கள் சமூகத்தின் மத்தியில் இருக்கும் இந்த நினைவுச்சின்னமானது இந்தப் பகுதியில் வாழும் என்னைப் போன்ற குடும்பங்களுக்குப் பெருமை தரக்கூடியதொன்றாகவே இருக்கப்போகின்றது. இச்சின்னமானது வெறும் சிலையாக மட்டுமல்லாமல், தமிழீழ மீட்புப்போரில் மரணித்தவர்களை நினைவுகூருமிடமாகவும் மூத்தோர்கள் வெளிப்படையாகத் தம் கவலைகளைக் களையுமிடமாகவும், இறந்தவர்களுக்குப் பெற்றோர் தம் மரியாதையைச் செலுத்திக் கௌரவிக்கும் இடமாகவும், எம்மை உருவாக்கிய வரலாற்றை எங்கள் இளம் தலைமுறையினர் அறியும் இடமாகவும் இருக்கப்போகின்றது.

எம் தாயக மண்ணைப் பிரிந்து, தொலைவில் வளர்ந்த எம்மைப் போன்றவர்களுக்கு, கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் இணைக்கும் பாலமாக இந்த நினைவுச்சின்னம் இருக்கும். இன்று நாம் பாதுகாப்புடனும் சுதந்திரத்துடனும் வாழ்ந்தாலும், எம் மக்களின் போராட்டக்கதைகள், தியாகங்கள் மற்றும் மனஉறுதி போன்றவற்றை எம்மோடு சுமந்து கொண்டுதான் இருக்கின்றோம். எம் வரலாறும், கோரிக்கைக் குரல்களும் மிக முக்கியமானவை என்பதையும், எங்கள் அடையாளமானது மரியாதையுடன் நினைவுகூரப்படவேண்டியதொன்று என்பதையும் இந்த நினைவுச்சின்னமானது ஈழத்தமிழரின் எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துக்கூறும் என்றே நம்புகின்றோம்.

இந்த நினைவுச்சின்னமானது பரந்த ஆஸ்திரேலிய சமூகத்தினருக்கும் ஒரு செய்தியைச் சொல்வதுடன் நினைவுகூருதல், பல்சமூகத்தன்மை, மனஉறுதி ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளது. ஈழத் தமிழர்கள் இடம்பெயர்வு, துயரம், இழப்பு ஆகியவற்றை எதிர்கொண்டபோதிலும், இங்கு வாழும் சமூகத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்களித்து வருவதையும், நிலைத்து வாழ்வதையும் இந்த நிகழ்வானது எடுத்துக்காட்டுகின்றது. போரின் தாக்கங்கள், எமக்கு இழைக்கப்பட்ட அநீதி, எமது இனத்தின் அவல வாழ்கை ஆகிய பாடங்களை எதிர்கால தலைமுறையினர் என்றும் நினைவில் கொள்ளவேண்டிய அதேநேரத்தில் கருணை, நீதி, அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு சமூகத்தை உருவாக்கவேண்டும் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும்

**கேள்வி:** எந்த நகரசபை இந்தச் சின்னத்தை அமைப்பதற்கான அனுமதியை வழங்கியது?



**பதில்:** ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள Cumberland City Council இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

**கேள்வி:** அந்த நகரசபையை மட்டும் அணுகினீர்களா, அல்லது வேறு நகரசபைகளிடமும் விண்ணப்பித்திருந்தீர்களா?

**பதில்:** இந்தப் பகுதியில் எங்கள் தமிழ்ச் சமூகத்தினர் அதிகளவில் வாழ்வதுடன் இங்கு அதிகளவில் பேசப்படும் மொழிகளில் தமிழே இரண்டாவது இடத்தில் உள்ளது. மேலும், பெரிய அளவிலான பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு விழாக்கள் Cumberland Council பகுதியில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதுடன் பல தசாப்தங்களாக எங்கள் சமூக மக்கள் கூடும் இடமாக 'சிவில் பார்க்' இருந்து வருகிறது. எனவே, அந்தப் பூங்காவின் நுழைவாயிலில் இந்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கின்றது.

**கேள்வி:** இந்த நினைவுச்சின்னத்தை உருவாக்குவதற்கான நோக்கம் அல்லது உந்துதல் என்ன?

**பதில்:** எமக்கான நினைவுகளைப் பாதுகாப்பது, உயிரிழந்தவர்களைக் கௌரவிப்பது, எதிர்கால தலைமுறைகளுக்கு எம்மைப் பற்றிய வரலாற்றை அளிப்பது என்பவற்றுடன் அஞ்சலி செய்யவும் போராட்ட வரலாற்றில் மரணித்தோரை நினைவுகூரவும் நிரந்தர இடமொன்றை உருவாக்குவதுமே எமது நோக்கமாக இருந்தது.

**கேள்வி:** இந்த நினைவுச்சின்னத்தை உருவாக்கும் முயற்சியின் பின்னணியில் ஏதேனும் அமைப்புகள் இருந்தனவா அல்லது இது தனிநபர்களின் கூட்டு முயற்சியா?

**பதில்:** சுமார் ஒரு தசாப்தத்திற்கு முன், அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸின் ஆறு.ரஜீவன் (Aru Rajeevan ) மற்றும் Tamil Civic Centreஇன் கூட்டு ஆதரவுடன் நான் இந்தத் திட்டத்தை தொடங்கினேன். தற்போது Cumberland நகர மேயர் ஒலா ஹமீட்டின் ஆதரவும் தலைமையும் காரணமாக இந்த நினைவுச் சின்னத்தின் உருவாக்கம் நனவாகியுள்ளது. தன்னார்வலர்கள், பல குடும்பங்கள், ஆதரவாளர்கள், தமிழ் சமூக உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து செயற்பட்ட ஒரு சமூக முயற்சிதான் இந்தத் திறப்பு விழாவை மறக்கமுடியாத ஒன்றாக மாற்றியிருக்கின்றது.

(மறுபக்கம் பார்க்கவும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும்

பகுதி -08

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன்

## இலக்குநோக்கிய செயற்கை நுண்ணறிவு



முதலில், இலக்கு நோக்கிய செயற்கை நுண்ணறிவு அல்லது இலக்குடைய செயற்கை நுண்ணறிவு (Goal Driven AI) என்ற கருத்தைப் பரிசீலிப்போம். பல செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் வெறுமனே வகைப்படுத்துதல், முற்கூறல், அல்லது உள்ளடக்க உருவாக்கம் போன்ற பணிகளைச் செய்கின்றன. ஆனால் இலக்கு நோக்கிய செயற்கை நுண்ணறிவு அமைப்புகள் ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காகத் தொடர்ந்து முடிவுகளை எடுத்து, தங்களது முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து, தேவையானபோது தங்களது நடத்தையை மாற்றிக்கொள்கின்றன. இத்தகைய அமைப்புகள் பின்னூட்டல் (feedback), திட்டமிடல் (planning), முடிவெடுத்தல் (decision making), உச்சப்படுத்தல் (optimisation) மற்றும் இசைவாக்கமடையும் திறன் (adaptation) ஆகியவற்றைக் கொண்டிருக்கும். அவை மாறிக்கொண்டிருக்கும் சூழல்களுக்குள் தங்களது இலக்கை அடைவதற்காகத் தன்னாட்சியுடன் செயற்படக்கூடியவையாக உள்ளன.

இலக்குநோக்கிய செயற்கை நுண்ணறிவின் மிகவும் பயனுள்ள பயன்பாடுகளில் ஒன்று தேடல் மற்றும் மீட்புப்பணிகள் (search and rescue) ஆகும். இயற்கை அனர்த்தங்கள், காடுகள், மலைப் பகுதிகள், அல்லது ஆபத்தான தொழிற்சாலைச் சூழல்கள் போன்ற இடங்களில் காணாமற்போனவர்களைக் கண்டுபிடிக்க AI அமைப்புகள் உதவுகின்றன. நவீன தேடல் மற்றும் மீட்பு அமைப்புகள் cameras, infrared sensors, LiDAR, sonar, GPS, மற்றும் தன்னாட்சி drones ஆகியவற்றிலிருந்து தகவல்களைப் பெற்று சுற்றுச்சூழலின் விரிவான படிமத்தை உருவாக்குகின்றன. இயந்திரக் கற்றல் மற்றும் கணினிப்பார்வை (computer vision) வழிமுறைகள் மனிதர்களின் அசைவு, உடல் வடிவம், அல்லது வெப்ப அடையாளங்கள் போன்றவற்றைக் கண்டறிய உதவுகின்றன. அதேவேளை, தன்னாட்சி மீகாம (navigation) அமைப்புகள் வண்டுகள் மற்றும் இயந்திர மனிதர்களைக் கடினமான நிலப்பரப்புகளுக்குள் பாதுகாப்பாக இயக்க உதவுகின்றன.

தேடல் மற்றும் மீட்புப் பணிகளில், இலக்கு நோக்கிய செயற்கை நுண்ணறிவின் முக்கியமான அம்சம் திட்டமிடலும் வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துவதும் ஆகும். இத்தகைய அமைப்புகள் சுற்றுச்சூழல் வரைபடங்களை உருவாக்கி, கிடைக்கக்கூடிய வளங்களைப் பகிர்ந்து, மிகவும் பயனுள்ள தேடல் பாதைகளைத் தேர்ந்தெடுக்கின்றன. பல வண்டுகள் மற்றும் இயந்திர மனிதர்கள், மற்றும் மனித மீட்புக் குழுக்கள் ஒன்றிணைந்து செயற்படும்போது, ஒரே பகுதியை மீண்டும் மீண்டும் தேடுவதைக் குறைத்து, பரந்த பகுதியை விரைவாகக் கையாள முடிகிறது. மேலும், நிலப்பரப்பு, கால நிலை மற்றும் முந்தைய அனுபவங்கள் போன்றவற்றின் அடிப்படையில் காணாமற்போனவர்கள் எங்கு இருக்கக்கூடும் என்பதையும் முற்கூறமுடிகிறது.

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன், அடிலெய்டு பல்கலைக்கழகத்தில் கணினி அமைப்பியல் பொறியியல் துறையில் பட்டப்படிப்பை முதற்தர சித்தியுடன் நிறைவு செய்தார். அதன் பின்னர், மென்பொருள் பொறியியலாளராக குறுகிய காலம் பணியாற்றிய அவர், 2010ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பள்ளியில் சிக்கலான வலையமைப்பு பகுப்பாய்வுத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கணிப்பொறி, தொற்றுநோயியல் ஆராய்ச்சிக் கல்வியாளரான பிரவீணன் தற்போது சிட்னி பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியல் துறையின் இணைப்பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்

ஆனால் மனித உயிர்களைக் காப்பாற்ற உதவும் இதே தொழில்நுட்பங்கள் இராணுவப் பயன்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படலாம். தன்னாட்சி வண்டுகள், தன்னாட்சி மீகாமம் (navigation), இலக்குக் கண்டறிதல் (target recognition), வள ஒதுக்கீடு மற்றும் நிகழ்நேர முடிவெடுத்தல் போன்ற திறன்கள் அனைத்தும் இராணுவத்திற்குப் பயன்படக்கூடியவை. இதன் விளைவாக, செயற்கை நுண்ணறிவின் ஆயுதமயமாக்கல் (weaponisation) மற்றும் Lethal Autonomous Weapon Systems (LAWS) பற்றிய கவலைகள் அதிகரித்துள்ளன. இத்தகைய அமைப்புகள் மனிதத் தலையீடு குறைவாகவோ அல்லது இல்லாமலோ இலக்குகளைத் தேர்ந்தெடுத்து தாக்கும் திறனைப் பெறக்கூடும். இதனால் பொறுப்புக்கூறல், மனிதக் கட்டுப்பாடு, போர்களின் தீவிரமடைதல், மற்றும் வாழ்வுசாவு முடிவுகளை இயந்திரங்களுக்கு ஒப்படைப்பது சரியா போன்ற கேள்விகள் எழுகின்றன.

செயற்கை நுண்ணறிவு போர்க்களத்தில் பயன்படுத்தப்படுவது இனி வெறுமனே எதிர்காலச் சாத்தியப்பாடு மட்டுமல்ல. அது ஏற்கனவே ரஷ்யா-உக்ரைன் போரில் இடம்பெற்று வருகிறது. AIஆல் இயக்கப்படும் வண்டுகள் தற்போது கண்காணிப்பு, மீகாமம், இலக்குக் கண்டறிதல் மற்றும் துல்லியமான தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. சில அமைப்புகள், தொடர்பாடல் குழப்பல் (jamming) செய்யப்பட்டாலும் தங்களது இலக்கைத் தொடர்ந்து கண்காணிக்கவோ, அல்லது அதனை நோக்கிச் செல்லவோ முடியக்கூடியவையாக உள்ளன. அதே போல், மாபெரும் அளவிலான போர்க்களத் தரவுகளைப் பகுத்தறிந்து படைத்துறை முடிவெடுத்தலை விரைவுபடுத்த இயந்திரக் கற்றல் அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக, செயற்கை நுண்ணறிவு வெறும் துணைத் தொழில்நுட்பமாக அல்லாமல், நேரடியாகப் போர்க்களத்தில் பயன்படுத்தப்படும் முன்னணி தொழில்நுட்பமாக மாறிவிட்டது.

இத்தகைய தன்னாட்சி அமைப்புகள் பற்றிய கவலைகள், இருப்பியல் அபாயம் (existential risk) குறித்த பரந்த விவாதங்களோடும் தொடர்புபட்டுள்ளன. இந்தக் கவலைகளைப் பற்றி ஆரம்பகாலத்திலேயே சிந்தித்தவர்களில் ஒருவர் அறிவியல் புனைகதை எழுத்தாளர் Isaac Asimov ஆவார். அவர் முன்வைத்த புகழ்பெற்ற ரோபோட்டியலின் மூன்று விதிகள் (Three Laws of Robotics) செயற்கை நுண்ணறிவு அறவியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

**விதி 1:** ஒரு ரோபோட் ஒரு மனிதருக்குத் தீங்கு விளைவிக்கும் செயலைச் செய்யக்கூடாது. அதே வேளை செயற்படாமல் இருப்பதன் மூலம் ஒரு மனிதருக்குத் தீங்கு ஏற்பட அனுமதிக்கவும் கூடாது.

**விதி 2:** ஒரு மனிதன் வழங்கும் கட்டளைகளுக்கு ரோபோட் கீழ்ப்படியவேண்டும்; ஆனால் முதல் விதிக்கு முரணாக அந்தக் கீழ்ப்படிதல் இருக்கக் கூடாது.

**விதி 3:** முதல் மற்றும் இரண்டாம் விதிகளுக்கு முரணாக இல்லாத வரையில், ஒரு ரோபோட் தன்னுடைய இருப்பைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

இந்த விதிகள் எளிமையானவையாகத் தோன்றினாலும், மனித விழுமியங்களை இயந்திரங்களுக்குள் விதிமுறைகளாகப் பதிப்பது எவ்வளவு சிக்கலானது என்பதை வெளிப்படுத்துகின்றன. Asimov அவர்கள் இவ்விதிகள் போதுமானவை அல்ல என்பதைத் தாமே தனது கதைகளில் காட்டியுள்ளார்.

(மறுபக்கம் பார்க்கவும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செயற்கை...

(10ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

உதாரணமாக Runaround என்ற கதையில் வரும் Speedy என்ற ரோபோட், மனிதக் கட்டளைக்கும் தன்னைக் காப்பாற்றும் உந்துதலுக்கும் இடையில் சிக்கிக்கொண்டு, தனது பணியை முடிக்காமல் வட்டமிட்டுச் சுற்றிக்கொண்டே இருக்கும். இதுபோன்ற நிலைமைகள் நிஜ உலகிலும் ஏற்படலாம். மனிதர்களின் கட்டளைகள் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கலாம்; பல்வேறு அறவியல் மதிப்புகள் ஒன்றுடன் ஒன்று மோதலாம்; அல்லது 'தீங்கு' என்ற சொல்லுக்கே வெவ்வேறு சூழல்களில் வெவ்வேறு அர்த்தங்கள் இருக்கலாம். இதனால் மனித அறவியலை நேரடியாக இயந்திர விதிகளாக மாற்றுவது மிகவும் கடினமான செயற்பாடாகிறது.

இதன் காரணமாக, பல்வேறு மாற்று அறவியல் அணுகுமுறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சில அணுகுமுறைகள் அதிகமான மக்களுக்கு அதிகமான நன்மையை உருவாக்க முயல்கின்றன. மற்றவை சில செயல்கள் எந்தச் சூழலிலும் செய்யப்படக்கூடாது என்ற கொள்கையைப் பின்பற்றுகின்றன. மேலும் மனித விழுமியங்கள், ஜனநாயகக் கண்காணிப்பு, ஆபத்து மதிப்பீடு மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அணுகுமுறைகளும் உள்ளன. குறிப்பாகத் தன்னாட்சி ஆயுதங்களைப் பொறுத்தவரை, மனிதக் கட்டுப்பாடு, பொறுப்புக்கூறல், முன்கணிக்கக்கூடிய தொழிற்பாடு, மற்றும் போர் தொடர்பான சர்வதேசச் சட்டங்களுக்கான இணக்கம் ஆகியவை முக்கியமான கொள்கைகளாக வலியுறுத்தப்படுகின்றன.

இருப்பியல் அபாயம் பற்றிய விவாதம் படைத்துறையுடன் மட்டும் முடிவடைவதில்லை. மின்சாரம், போக்குவரத்து, நிதி, மருத்துவம், தொடர்பாடல், மற்றும் அரச நிர்வாகம் போன்ற முக்கியமான கட்டமைப்புகள் செயற்கை நுண்ணறிவு அமைப்புகளின் மீது அதிகமாகச் சார்ந்துவிட்டால் என்ன நிகழும் என்ற கேள்வியும் எழுகிறது. காலப்போக்கில் மனிதர்களின் திறன்களும் நிபுணத்துவமும் குறைந்து, இயந்திரங்களின் மீது மிகுதியான சார்புநிலை உருவாகலாம். இது மிக மோசமாகிப் போகும்போது மனிதர்கள் தாமே உருவாக்கிய அமைப்புகளைத் தாமே போதுமான அளவில் புரிந்துகொள்ளவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாத நிலை உருவாகலாம்.

இதற்கும் அப்பால், மிக உயர்ந்த திறன்களைக் கொண்ட AI அமைப்புகள் ஒரு நாள் தன்னாட்சி, உணர்வு, அல்லது அறவியல் அந்தஸ்தைப் பெறக்கூடுமா என்ற விவாதமும் உள்ளது. சிலர் அவற்றை வெறும் கருவிகளாக அல்லாமல், கூட்டாளிகளாகக் கருதவேண்டிய நாள் வரலாம் என்று வாதிடுகின்றனர். மற்றவர்கள் இதை முற்றிலும் மறுக்கின்றனர். இவ்விரு நிலைப்பாடுகளுக்கும் இடையிலான முரண்பாடே சிலர் 'AI முரண்நிலை' (AI paradox) என்று அழைப்பதாகும். மனிதர்கள் அதிகம் சிந்திக்கவும் கற்கவும் முடியும் அமைப்புகளை உருவாக்க விரும்புகின்றனர்; ஆனால் அவை மனிதர்களைப் போன்றதாக மாறும் அளவுக்கு வளர்ந்தால், அவற்றை வெறும் கருவிகளாக நடத்துவது கடினமாகிறது. The Matrix, Blade Runner, Ex Machina, I, Robot, மற்றும் Her போன்ற அறிவியல் புனைகதைப் படைப்புகள் இந்தக் கேள்விகளை பல தசாப்தங்களாக ஆராய்ந்து வருகின்றன. தமிழில் இந்த அளவுக்கு இந்தக் கருதுகோள்களை ஆராயும் திரைப்படங்கள் வரவில்லை என்பதும் நோக்கற்பாலது.

மொத்தத்தில், இலக்கு நோக்கிய செயற்கை நுண்ணறிவு என்பது செயற்கை நுண்ணறிவின் மிகவும் பிரயோசனமான அதேநேரத்தில் மிகவும் சவாலான துறைகளில் ஒன்றாகும். இங்கே மனித உயிர்களைக் காப்பாற்ற உதவும் தேடல் மற்றும் மீட்பு அமைப்புகளை உருவாக்கும் அதே தொழில்நுட்பங்கள், உயிர்களைப் பறிக்கும் தன்னாட்சி ஆயுதங்களையும் உருவாக்கக்கூடும். எனவே, வெறுமனே அதிக திறன் கொண்ட AI அமைப்புகளை உருவாக்குவது அல்ல, அவை மனித விழுமியங்களுடன் ஒத்திசைவாகச் செயற்பட்டு மனிதகுலத்திற்கு நன்மை பயக்கும் வகையில் இருப்பதை உறுதிசெய்வதே இந்தத் துறையின் மிகப்பெரிய சவாலாகும்.

தொடரும்

# தமிழர்...



(முதலாம் பக்கத்தின் தொடர்ச்சி)

**கேள்வி:** இந்த நினைவுச்சின்னத்தின் வடிவமைப்பும் கல்வெட்டுகளும் எவற்றைக் குறிக்கின்றன? இதில் உள்ள சின்னங்கள் எவற்றைப் பிரதிபலிக்கின்றன? அவை எப்பொருள்களால் உருவாக்கப்பட்டுள்ளன?

**பதில்:** இந்த நினைவுச்சின்னமும் அதன் குறியீடுகளும் தமிழ்ச் சமூகத்திற்குப் பண்பாட்டு ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் முக்கியத்துவம் மிகுந்தவையாகக் காணப்படுகின்றன.

நினைவுச்சின்னத்தின் உச்சியில் காணப்படும் கார்த்திகைப் பூவானது, எமது மனஉறுதி, நினைவுகூரல், தியாகம் ஆகியவற்றுடன் தமிழ் அடையாளத்துடன் நெருங்கிய தொடர்புடைய சின்னமாகவும் காணப்படுகின்றது. இது தமிழீழத்தின் தேசிய மலராகவும், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தின் மாநில மலராகவும் கருதப்படுவதுடன் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு ஆழமான உணர்வுகளையும் பண்பாட்டு அர்த்தத்தையும் வழங்குவதாகவும் உள்ளது.

**நினைவுப்பலகையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:**

"தமிழீழத் தாயகத்தில் அமைதி, நீதி, சுதந்திரம் என்ற உயரிய இலட்சியங்களுக்காய் இறுதிவரை போராடி இனப்படுகொலையில் உயிரிழந்த எமதினிய உறவுகளை நெஞ்சில் நிறுத்தி நினைவு கொள்கிறோம்."

**இதன் ஆங்கில வாசகம்:**

"This Peace Garden memorial honours the countless Tamil lives lost in their quest for peace, justice, and freedom in the Tamil Eelam homeland.
May their sacrifice be forever remembered, and may their legacy inspire us in our collective pursuit of liberation."

இந்த வடிவமைப்பு எமது இனத்தின் இழப்பு, அவர்களின் நினைவுகள், மனஉறுதி மற்றும் நீதிக்கான அழைப்பு என்பவற்றைப் பிரதிபலிக்கிறது. இந்தக் கல்வெட்டானது எதிர்கால தலைமுறைகளுக்காக வரலாற்று உண்மையை நிலைத்துநின்று உரைக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கேள்வி:** முள்ளிவாய்க்கால் படுகொலையானது பல இடங்களில் 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள்' என்று நினைவுகூரப்படுகிறது. ஆனால் நீங்கள் இதை "இனப்படுகொலை நினைவுச்சின்னம்" என்று பெயரிட்டுள்ளீர்களே?

**பதில்:** ஆம். ஏனெனில் நடந்தது ஒரு தனிப்பட்ட படுகொலை மட்டும் அல்ல. அது 78 ஆண்டுகளாகப் பல்வேறு இலங்கை அரசுகளால் தமிழர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அழிவு, இடம்பெயர்வு, வன்முறை ஆகியவற்றின் வடிவத்தைப் பிரதிபலிப்பதால் அது இனப்படுகொலையாகவே கருதப்படுகிறது.

**கேள்வி:** இந்த நினைவுச்சின்னத்துக்கான நிதி எவ்வாறு திரட்டப்பட்டது? எவ்வளவு செலவானது?

**பதில்:** பெரும்பாலும் சமூக நன்கொடைகள் மற்றும் தன்னார்வ பங்களிப்புகளின் மூலம் நிதி திரட்டப்பட்டது. தோட்ட அமைப்பு மற்றும் பூங்கா பராமரிப்பை நகரசபையே முன்னெடுக்கும்.

**கேள்வி:** இதில் உள்ள சிலைகள் மற்றும் கலையம்சப்பகுதிகள் இங்குதான் உருவாக்கப்பட்டனவா, அல்லது வேறு இடங்களில் செய்துகொண்டு வரப்பட்டனவா?

**பதில்:** சில பகுதிகள் ஆஸ்திரேலிய நிறுவனங்களால் உள்ளூரிலேயே உருவாக்கப்பட்டன. சில சிறப்பம்சமான கலை மற்றும் கட்டமைப்புப் பகுதிகள் வேறு இடங்களில் தயாரிக்கப்பட்டுப் பின்னர் இங்கு வைத்து ஒன்றிணைக்கப்பட்டன. இச்சின்னத்தின் உருவாக்கத்துக்காகத் தலைமுறைகள் தாண்டி நிலைத்திருக்கக்கூடிய வலுவான பொருள்களே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

**கேள்வி:** இந்த நினைவுச்சின்னத்தைப் பார்வையிடக்கூடிய நேரம் எது?

**பதில்:** இது ஒரு பொதுப்பூங்காவில் அமைந்துள்ளமையால் பொதுமக்கள் எந்த நேரத்திலும் வந்து பார்வையிடலாம். நகரசபையால் CCTV மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் இச்சின்னத்துக்கான பராமரிப்பும் நகரசபையினாலேயே மேற்கொள்ளப்படும். இந்த நினைவுச்சின்னமானது எப்போதும் மரியாதையுடனும் பொறுப்புடனும் பொதுமக்களால் அணுகப்படக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதே எமது நோக்கம்.

**கேள்வி:** இலங்கை அரசின் ஆதரவாளர்கள் அல்லது முகவர்கள் இந்த நினைவுச்சின்னத்தை சேதப்படுத்த முயன்றால், பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளனவா?

**பதில்:** அத்தகைய கவலைகள் எமக்கும் இருந்தன. ஆனால் நினைவுச்சின்னத்தைப் பாதுகாக்கப் பொருத்தமான பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் நகரசபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கேள்வி:** இந்தத் திட்டத்தைத் தடுக்க இலங்கை அரசின் தரப்பில் ஏதேனும் அழுத்தங்கள் அல்லது தடைகள் இருந்தனவா?

**பதில்:** இலங்கை அரசின் தரப்பில் இருந்து தடைகள் ஏதுமில்லாத போதிலும் பிற தரப்புகளில் இருந்து சவால்களும் அழுத்தங்களும் இருந்தன. ஆனால் அமைதியைப் பேணி சட்டபூர்வமாகவும் ஜனநாயகக் கொள்கைகளின் ஆதரவுடனும் சமூகத்தின் உறுதியுடனும் இந்தத் திட்டமானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கேள்வி:** ஆஸ்திரேலியாவில் ஈழத்தமிழர்கள் பல மாநிலங்களில் வாழ்கின்றனர். நகரசபைகள் பொதுவாக சிறிய நிலப்பகுதிகளை மட்டுமே ஒதுக்குவதால் பெரிய நினைவுச்சின்னங்கள் அமைப்பது எப்போதும் சாத்தியமில்லை. அதேநேரத்தில் நினைவுச்சின்னங்களை அமைப்பது காலத்தின் தேவையாகவும் உள்ளது. இதற்கான தீர்வுதான் என்ன?

**பதில்:** சிறிய நினைவுச்சின்னங்கள் கூட ஆழமான அர்த்தத்தைக் கொண்டிருக்கக்கூடும். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சமூகங்கள், அங்குள்ள சட்டங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவகையில் நினைவுகூரும் வடிவங்களை உருவாக்கலாம். அதேசமயம் ஒற்றுமையும், சின்னங்களை உருவாக்குவதன் பொதுவான நோக்கமும் மாறாமல் இருக்கவேண்டும்.


**கேள்வி:** இந்த நினைவுச்சின்னத்தை உருவாக்கியவர்களில் நீங்களும் ஒருவர். இதனால் உங்கள் தாயகப்பயணத்தில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளனவா?

**பதில்:** இதில் ஈடுபட்டவர்கள் வரக்கூடிய சாத்தியமான அபாயங்களைப் புரிந்துகொண்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதும் வரலாற்று உண்மையைப் பாதுகாப்பதும் புறக்கணிக்கமுடியாத ஒரு நெறிப் பொறுப்பாகவே கருதப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காற்றில் கலந்த கனத்த குரலோன்

ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி



“மரணம் எல்லாருக்கும் வரக்கூடியதுதான்… ஆனா, அது நம்மள எப்படி நினைச்சு பாக்குதுங்கிறதுலதான்யா இருக்கு முதல் மரியாதை!” பாரதிராஜா

நாம் ஒருவரை எவ்வாறு நினைவில் வைத்திருக்கிறோம். சிலருக்கு அவர்களின் முகங்கள். பலருக்கு அவர்களின் குரல்கள். இயக்குநர் இமயம் பாரதிராஜா என்ற பெயரை நினைத்தாலே அவரது கூப்பிய கரங்களும், “என் இனிய தமிழ் மக்களே” என்று ஒலிக்கும் அவரின் கனத்த குரலும் தானே. அந்தக் குரல் இன்று தன்னுடைய ஓசையை நிறுத்திக்கொண்டு விட்டது. தேனி மாவட்டத்தில் அல்லிநகரம் என்ற அழகான கிராமத்தில் 1941இல் பிறந்த சின்னசாமி எனும் இயற்பெயருடைய பாரதிராஜாவுக்கு சிறுவயதிலிருந்தே சினிமா மீது ஆர்வம். சினிமாவில் சேர்ந்து நடிகராக வரவேண்டும் என்பதுதான் அவரின் கனவாக இருந்தது. “பள்ளியில் படிக்கும்போது நாடகங்களை இயக்கி நடிப்பேன். அப்போது கிடைத்த பாராட்டு நான் சினிமாவில் நடிக்கவேண்டும் என்ற ஆசையைத் தூண்டியது. பராசக்தி வசனம் எல்லாம் அத்துப்படி. 'சிவாஜியா, நானா?' என்ற சவாலில் தான் சினிமா கனவில் சென்னை வந்தேன்” என ஒரு பேட்டியில் கூறியுள்ளார் பாரதிராஜா. சென்னைக்கு வந்த ஆரம்ப காலத்தில் கடுமையான வறுமை. ஆனால், சினிமா மீதான தாகம் குறையவில்லை. கன்னடத் திரையுலகின் ஜாம்பவான் புட்டண்ணா கனகல், பி. புல்லையா, ஏ. ஜெகநாதன் போன்ற முன்னணி இயக்குநர்களிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து சினிமா எனும் கலையின் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டார். தனது தங்கை பாரதி மற்றும் தம்பி ஜெயராஜ் ஆகியோரின் பெயர்களை இணைத்து 'பாரதிராஜா' என்று தனது பெயரை மாற்றிக்கொண்டார்.

1977க்கு முன்பு வரை தமிழ் சினிமா எப்படி இருந்தது? செட்டிங் போடப்பட்ட ஸ்டுடியோக்கள், பவுடர் அப்பிய முகங்கள், செயற்கையான வசனங்கள் என நாடகத்தின் நீட்சியாகவே இருந்தன. அதை ஒற்றை ஆளாக உடைத்தெறிந்ததுதான் '16 வயதினிலே' தேசியத் திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் (NFDC) உதவியோடு ஒரு கருப்புவெள்ளைப் படமாக எடுக்கத் திட்டமிடப்பட்ட இக்கதை, பின்னாளில் வண்ணப்படமாக மாறி தமிழ்த் திரையுலகின் தலையெழுத்தையே மாற்றியது. ஸ்ரீதேவி 'மயில்' ஆகவும், கமல்ஹாசன் 'சப்பாணி' ஆகவும், ரஜினிகாந்த் 'பரட்டை' ஆகவும் வாழ்ந்திருந்தனர். காரில் வந்து இறங்கும் ஹீரோக்களைப் பார்த்த மக்களுக்கு, சேற்றில் கால் வைத்து நடக்கும் சப்பாணியும், பாவாடை தாவணியில் திரியும் மயிலும் தங்களின் சொந்த பந்தங்களாகத் தெரிந்தனர். கிழக்கே போகும் ரயில், புதிய வார்ப்புகள், அலைகள் ஓய்வதில்லை, மண் வாசனை போன்ற படங்கள் மூலம் கிராமத்துக் காதலையும், சமூகக் கட்டமைப்புகளையும் பேசினார். 'பாரதிராஜாவுக்குக் கிராமத்துப் படம் மட்டும்தான் எடுக்கத் தெரியும்' என்ற விமர்சனத்தை உடைக்க, மேற்கத்திய பாணியில் 'சிகப்பு ரோஜாக்கள்' என்ற சைக்கோ த்ரில்லர் படத்தையும், 'டிக் டிக் டிக்' என்ற கிரைம் த்ரில்லர் படத்தையும் இயக்கித் தன் பன்முகத்தன்மையை நிரூபித்தார்.

பாரதிராஜாவின் திரைமொழி தனித்துவமானது. அவரின் படங்களை எந்தக் காட்சியிலிருந்து நீங்கள் பார்த்தாலும், அதில் அவரின் தனிமுத்திரையை வைத்து அவர் படம் என்பதை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். மரங்கள், ஓடும் நதிகள், மேயும் ஆடுகள், பறக்கும் பறவைகள் என இயற்கையைத் தனது கதையின் ஒரு கதாபாத்திரமாகவே மாற்றிவிடுவார். அவரின் கதாபாத்திரங்களை நாம் அன்றாட வாழ்வில் காண்பவர்களைப் போல் இயற்கையாகவே படம்பிடித்திருப்பார். அவரின் ஹீரோக்கள் பவுடர் அப்பாமல், கருகருவென தமிழ் மண்ணின் நிறத்தோடு வலம் வந்தனர். கதாநாயகிகள் வெள்ளையாக இருக்கவேண்டிய அவசியமில்லை, அவர்கள் மாநிறமாக இருந்தாலும் தங்களின் நடிப்பால் பேரழகியாகத் தெரிந்தனர். அவரின் படங்களில் இசை என்பது பட்டத்துடன் ஒன்றிணைந்து காலத்தால் அழிக்கமுடியாத எத்தனையோ பாடல்களை இளையராஜாவும், பாரதிராஜாவும் கொடுத்திருக்கின்றனர்.

பாரதிராஜா வெறும் காதல் படங்களை மட்டுமே எடுக்கவில்லை. சமூகத்தில் நிலவிய சாதியக் கொடுமைகளையும், மூடநம்பிக்கைகளையும் தனது கூர்மையான திரைக்கதையின் மூலம் சாடியிருக்கிறார். 1987இல் வெளிவந்த 'வேதம் புதிது' படமானது சாதியக் கட்டமைப்பையும், மதப் போலித்தனத்தையும் தோலுரித்துக் காட்டியது . சத்யராஜ் 'பாலுத் தேவர்' என்ற கதாபாத்திரமாகவே வாழ்ந்திருப்பார்.1994 ஆம் ஆண்டு வெளிவந்த 'கருத்தம்மா' திரைப்படமானது மதுரை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலவி வந்த 'பெண் சிசுக்கொலை' என்ற கொடூரமான வழக்கத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது. இப்படம் வெளியான பிறகு இக்கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வு மக்களிடையே பெருமளவில் ஏற்பட்டது என்று கூறினால் அது மிகையில்லை.


இயக்குநர் இமயம் பாரதிராஜா மற்ற சினிமா நடிகர்களைப் போல வெறும் திரையில் நடிப்பவரல்லர். சமரசமற்ற தமிழ் உணர்வாளராகவும், சமூகப் போராட்டங்களின் முன்னணிப் போராளியாகவும் கடைசி மூச்சு வரையிலும் போராடியவர். இலங்கையில் ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் ஆளாக்கப்பட்ட காலகட்டங்களில், தமிழகத் திரையுலகை ஒருங்கிணைத்து முதன்முதலில் வீதியில் இறங்கிப் போராடிய ஆளுமை பாரதிராஜா என்பதை நாம் மறக்கமுடியாது. அரசியல் அழுத்தங்களையும், தனது திரையுலக வணிகப் பாதிப்புகளையும் பொருட்படுத்தாது, தமிழ்த் திரைக் கலைஞர்களைத் திரட்டிப் பிரமாண்டப் பேரணிகளையும், தார்மீக உண்ணாவிரதப் போராட்டங்களையும் ஒருங்கிணைத்ததோடு தொடர்ச்சியாக ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தொடர்ந்து குரல் கொடுத்தார். தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினையான காவிரி நீர் விவகாரத்தில், பாரதிராஜாவின் பங்களிப்பு மிக முக்கியமானது. நெய்வேலியில் திரையுலகினர் நடத்திய உரிமைப் போராட்டத்தில் கலந்துகொண்டு தமிழகத்தின் தண்ணீர் உரிமையை கடுமையாக வலியுறுத்தினார். இதன் உச்சகட்டமாக, 2018ஆம் ஆண்டு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி நடைபெற்ற போராட்டங்களின் போது, மத்திய அரசின் மெத்தனப் போக்கிற்குத் தனது கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்தார். தமிழர்களின் உரிமைக்காக, மத்திய அரசு தனக்கு வழங்கிய உயரிய கௌரவமான 'பத்மஸ்ரீ' விருதைத் திரும்ப ஒப்படைப்பதாக அதிரடியாக அறிவித்தார். இந்த அறிவிப்பு தேசிய அளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியதோடு, காவிரிப் பிரச்சினையின் தீவிரத்தை டெல்லி வரை கொண்டுசேர்த்தது.

ஒரு இயக்குநராகத் தமிழ் சினிமாவின் பல நட்சத்திரங்களை உருவாக்கிய பாரதிராஜா, தன் மூத்த மகன் மனோஜ் பாரதிராஜாவையும் மாபெரும் நாயகனாக்க ஆசைப்பட்டார். அந்த எல்லையற்ற தந்தைப் பாசமே, அவரது திரைப்பயணத்தில் சில சறுக்கல்களுக்குக் காரணமாக அமைந்தது. 1999இல் தன் மகனை அறிமுகம் செய்து 'தாஜ்மஹால்' திரைப்படத்தை மிக பிரமாண்டமாகத் திட்டமிட்டார். ஏ.ஆர். ரஹ்மானின் இசை, வைரமுத்துவின் வரிகள் என மகா கூட்டணி அமைந்தது. அதுவரை எளிய பட்ஜெட்டில் யதார்த்த சினிமா எடுத்த பாரதிராஜா, மகனுக்காகப் பிரமாண்ட செட், சண்டைக் காட்சிகள் என வணிக சமரசங்களைச் செய்தார். பாடல்கள் ஹிட்டடித்தாலும், படம் வணிக ரீதியாகத் தோல்வியடைந்தது. அடுத்ததாக மகனுக்காக அவர் இயக்கிய 'அல்லி அர்ஜுனா' (2002) திரைப்படமும் தோல்வியைத் தழுவியது. 2000களுக்குப் பின் மாறிவந்த புது தலைமுறை இரசனையையும், இளைஞர்களின் எதிர்பார்ப்பையும் பாரதிராஜா கணிக்கத் தவறியதால் தொடர்ந்து அவருக்குத் தோல்விகள். மகனைத் திரையுலகில் நிலைநிறுத்த அவர் எடுத்த தொடர் முயற்சிகளும் தயாரிப்புகளும், அவருக்குப் பெருமளவில் பொருளாதார நஷ்டத்தையும் கடுமையான மன உளைச்சலையும் தந்தன. எத்தனையோ பேரைச் செதுக்கிய ஒரு மாபெரும் திரைமேதை, தன் மகனின் எதிர்காலத்திற்காகத் தன் பிரத்தியேகத் திரைமொழியைச் சமரசம் செய்து சரிவைச் சந்தித்தார். இயக்குநராகச் சறுக்கல்களைச் சந்தித்தபோது, அவர் ஒரு நடிகராகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டார். ஆயுத எழுத்து, பாண்டிய நாடு, குரங்கு பொம்மை, திருச்சிற்றம்பலம் மற்றும் மகாராஜா போன்ற திரைப்படங்களில் அவர் ஏற்ற குணச்சித்திர வேடங்கள், அவர் எவ்வளவு பெரிய நடிப்பு அரக்கன் என்பதை மீண்டும் நிரூபித்தன.

தன் மூத்த மகன் மனோஜ் பாரதிராஜாவின் திடீர் மறைவு, அவரை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் முற்றிலும் உடைத்துப் போட்டிருந்தது. தன் உயிரினும் மேலாக நேசித்த மகனின் பிரிவு தந்த தாங்கமுடியாத துயரமே அவருடைய இறுதி நாள்களை வேகப்படுத்தியது என்றே சொல்லலாம். சமீபத்திய பேட்டி ஒன்றில் பேட்டியில் “நான் மறைந்தாலும் என்னுடைய உடல் மட்டும்தான் இந்த மண்ணில் கலக்கும். என்னுடைய படைப்புகள் மக்களின் மனதில் வாழ்ந்து கொண்டே இருக்கும் என்பது எனக்குத் தெரியும். அந்த நம்பிக்கை இருக்கிறது. ஆனால் நாம் நேசித்த மனிதர்கள், இடங்கள், நினைவுகள், இந்த அழகான உலகம்… இவை அனைத்தையும் விட்டுவிட்டுப் போக வேண்டுமென்ற எண்ணம் வந்தால் ஒருவித பயம் இருக்கத்தான் செய்கிறது” அவர் இந்தப் பூவுலகை விட்டு மறைந்தாலும் அவரின் கதாபாத்திரங்களான மயிலு, கருத்தம்மா, சப்பாணி, பரட்டை என்றும் நினைவில் இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ.–ஈரான் ஒப்பந்தத்தின் முக்கியமான 14 அம்சங்கள்



வொஷிங்டன், ஜூன் 17

**ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான பதற்றத்தைத் தணித்து, போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான 14 அம்சங்கள் அடங்கிய வரைவு ஒப்பந்த விவரங்கள் வெளியாகியுள்ளன.**

இந்த ஒப்பந்தத்தின்படி, லெபனான் உட்பட அனைத்து முனைகளிலும் இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படும். ஈரானின் இறையாண்மையை மதிப்பதாகவும், அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்றும் அமெரிக்கா உறுதியளித்துள்ளது. மேலும், 30 நாள்களுக்குள் ஈரான் துறைமுகங்கள் மீதான கடல்வழி முற்றுகையை அமெரிக்கா விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதும், ஈரான் தனது கட்டுப்பாட்டிலுள்ள ஹோர்மூஸ் நீரிணையை மீண்டும் திறக்க வேண்டும் என்பதும் இதில் அடங்கும். அதேபோல், ஈரானின் எண்ணெய் ஏற்றுமதித் தடைகளை நீக்கி, அதன் மூலம் கிடைக்கும் வருவாயை முழுமையாகப் பயன்படுத்த அனுமதிக்கவும், ஈரானின் மறுசீரமைப்புத் திட்டங்களுக்காக அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் 30,000 கோடி டொலர் வழங்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இறுதி ஒப்பந்தத்தை எட்ட 60 நாள்கள் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதோடு, இக்காலப்பகுதியில் ஈரானின் முடக்கப்பட்ட நிதியை விடுவிக்கவும் அமெரிக்கா சம்மதித்துள்ளது. பதிலுக்கு, அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யப் போவதில்லை என ஈரான் புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டை வழங்கியுள்ளது.

எனினும், முடக்கப்பட்ட நிதி விடுவிப்பு, எண்ணெய் ஏற்றுமதித் தடை நீக்கம், கடல்வழி முற்றுகை விலக்கு ஆகிய 3 பிரதான அம்சங்கள் நிறைவேற்றப்படும் வரை இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை தொடங்கப்படாது என ஈரான் நிபந்தனை விதித்துள்ளது. அதே நேரம், ஈரானின் ஏவுகணைத் திட்டம் மற்றும் பிராந்திய ஆயுதக் குழுக்களுக்கான ஆதரவு போன்ற விவகாரங்கள் அடுத்தகட்ட பேச்சு வார்த்தையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (எ-இ)

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்

## ஸ்லோவேக்கியா பிரதமர் வலியுறுத்து

லண்டன், ஜூன் 17

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வழங்கப்படவேண்டும் என்று ஸ்லோ வேக்கியா பிரதமர் ராபர்ட் பிகோ உறுதியாக வலியுறுத்தியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக ஸ்லோவேக்கியா சென்றுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடியை, அந்நாட்டுப் பிரதமர் ராபர்ட் ஃபிகோ சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தியப் பிரதமர் ஒருவர் ஸ்லோவேக்கியாவுக்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறையாகும்.

இந்தச் சந்திப்பின்போது பாதுகாப்பு, டிஜிற்றல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் 11 முக்கியமான ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. அத்துடன், பயங்கரவாத எதிர்ப்புக்கான சிறப்புக் குழு உட்பட 3 பிரதான அறி விப்புகளும் வெளியிடப்பட்டன. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைப் பாராட்டிய பிரதமர் பிகோ, மோடியின் தேர்தல் வெற்றிகளை "உலக அரசியல் அதிசயம்" எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய பிரதமர் மோடி, இந்தியாவின் விண்வெளித் துறையில் முதலீடு செய்ய ஸ்லோவேக்கியா நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்ததுடன், அந்நாட்டுப்பிரதமரை இந்தியா வருமாறும் கேட்டுக்கொண்டார். (எ-இ)

# 16 வயதுக்கு உட்பட்டோருக்கு ரிக்ரொக், ஸ்னாப்சட் தடை!

லண்டன், ஜூன் 17

ரிக் ரொக், ஸ்னாப்சாட் மற்றும் இன்ஸ்டாகிராம் உட்பட முக்கியமான சமூக ஊடகங்களை 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படும் என பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மர் அறிவித்துள்ளார்.

இணையவழியில் இளைஞர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், நள்ளிரவில் அவர்கள் தொடர்ந்து கைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது. இது குறித்துப் பேசிய பிரதமர் ஸ்டார்மர், குழந்தைகளின் நல்வாழ்வைப் பாதுகாக்க முழுமையான தடை விதிப்பதே சரியான தெரிவு எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில், பெரும்பாலான மக்கள் இந்தத் தடைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். எனினும், இந்தத் திட்டம் நடைமுறையில் பல புதிய சிக்கல்களை உருவாக்கக்கூடும் என சமூக செயற்பாட்டாளர்களும் இணைய பாதுகாப்புப் பிரசாரகர்களும் எச்சரித்துள்ளனர். (எ-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம்
15 . 04 . 1960

மறைவு
16 . 06 . 2026

### நடராசா தவராசலிங்கம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட நடராசா தவராசலிங்கம் அவர்கள் நேற்று (16.06.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - பவளம் தம்பதியரின் அன்பு மகனும், அமரர் முத்துவேலு - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், அமரர் சரஸ்வதி - தேவராசா, விமலாதேவி - பாலசுப்பிரமணியம் (அமரர்) மகேந்திரராசா - வசந்தா (சுவிஸ்), பாலசுந்தரம் - கிளி (அமரர்) சிவயோகசிந்தாமணி (கனடா) - சண்முகராசா (அமரர்) தேவராசலிங்கம், விசயா (கனடா) கௌசலாதேவி - யோகநாதன் (ஜேர்மன்), தனபாலசிங்கம் (அமரர்) - விஜயகுமாரி, சிவலிங்கம் - சோதி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், சண்முகலிங்கம்- சரஸ்வதி, ஸ்ரீபதிநாதன் (அமரர்) - இராஜேஸ்வரி, சிவமங்கை - தியாகராசா (அமரர்), செந்தூர் வடிவேல் (அமரர்) ஸ்ரீமதிதேவி - பாலேந்திரா ஜெகநாதன் - ஞானரோகினி, ஸ்ரீவிஜயன் - திருச்செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2026) புதன்கிழமை மதியம் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி - த.விமலாதேவி
077 240 8867
077 905 3324

(CS 31996)A

# இந்தியப் பிரதமர் மோடி வெளிநாடுகளுக்குப் பயணம்


புதுடில்லி, ஜூன் 17

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிரான்ஸ் மற்றும் ஸ்லோவோக்கியா ஆகிய நாடுகளுக்குத் தொடர்ச்சியான உத்தியோகபூர்வ பயணங்களை மேற்கொண்டுள்ளார். முதலில் பிரான்ஸ் சென்ற பிரதமர் மோடி, அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதைத் தொடர்ந்து, இரண்டு நாள் பயணமாக ஸ்லோவாக்கியா சென்ற அவர், அந்நாட்டுப் பிரதமர் ரொபர்ட் பிகோவை சந்தித்து விசேட உரையாற்றினார். ஸ்லோவோக்கிய ஜனாதிபதி பீட்டர் பெல்கிரினியையும் பிரதமர் மோடி சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்புகளின்போது இருதரப்பு உறவுகள், வர்த்தகம் மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகள் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சுவாமி வீதி உலாவில் பாரம்பரிய கலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

பருத்தித்துறை சிவன் கோவில் வருடாந்த மகோற்சவத்தின் எட்டாம் திருவிழாவை முன்னிட்டு, பசுபதீச்சரப் பெருமான் தமிழர் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வீரதீர விளையாட்டுகளுடன் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வசந்த மண்டப் பூசையைத் தொடர்ந்து உள்வீதி வலம் வந்து முத்துச்சப்பறத்தில் பர்வத வர்த்தனி சமேதராக எழுந்தருளிய பசுபதீச்சர பெருமான், வெளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதன்போது பருத்தித்துறை சிலம்பயாழி தற்காப்புக் கழகத்தின் வீரர்கள் கணேசமூர்த்தி ஆசானின் வழிகாட்டுதலில், வீரதீர கலைகளை அரங்கேற்றியிருந்தனர். இதன்போது சிலம்பம், சுருள் வாள் வீச்சு, தீப்பந்தச் சுழற்சி, மான் கொம்பு வீச்சு உள்ளிட்ட தமிழர் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வீரதீர விளையாட்டுகள் அரங்கேற்றப்பட்டன. (க-100)

# அமெரிக்க விமானப்படையின் விமானம் நொருங்கி விபத்து!

வொஷிங்டன், ஜூன் 17

தெற்கு கலிபோர்னியாவில் உள்ள எட்வர்ட்ஸ் விமானப்படைத் தளத்திலிருந்து புறப்பட்ட அமெரிக்க விமானப்படையின் பி52 ஸ்ட்ராடோபோர்ட்ரஸ் ரக குண்டுவீச்சு விமானம் விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த எட்டு பேரும் உயிரிழந்தனர்.

ரேடார் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான வழக்கமான சோதனைப் பறப்பிற்காக, அணுகுண்டு மற்றும் வழக்கமான குண்டுகளைச் சுமந்து செல்லக்கூடிய இந்த எட்டு என்ஜின்கள் கொண்ட போர் விமானம் தயாராகியிருந்தது. எனினும், ஓடுபாதையிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விமானம் விபத்துக்குள்ளாகி தீப்பிடித்து எரிந்ததாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானத்தில் இருந்த இராணுவத்தினர், அரச ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் அடங்கிய குழுவைச் சேர்ந்த எட்டுப் பேரும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர். விபத்து நடந்த இடத்தின் வான்வழிப் படங்களை ஆய்வு செய்த பின்னர், விமானம் முற்றிலுமாக அழிந்துவிட்டதாகவும், இதில் யாரும் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என்றும் விமானப்படை கர்னல் ஜேம்ஸ் ஹேய்ஸ் உறுதிப்படுத்தியுள்ளார். விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)


## நாகபூஷனி திருமண சேவை

50% கட்டணக் கழிவு

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும். மிக விரைவாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணிமண்டபத்துக்கு 3 வீடு தள்ளிய லேனில்)

தொடர்புகளுக்கு:-

077 138 7596, 071 999 9300

CS/61679) J-1


## VALIKAMAM WEST PRADESHIYA SABHA, CHULIPURAM.
## INVITATION FOR BIDS (IFB) – Stamp duty & COUNCIL FUND 2026

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2026.06.17 until 2026.06.30 from 09:00 hrs to 15:00 hrs.
3. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below.
   " Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to The Chairman, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram (T.P No: 021 225 0144, Fax No: 021 225 0144) during the period from 2026.06.17 until 2026.06.30 from 09:00 hrs to 15:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram at or before 10.00 hrs, 2026.07.01 Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Head office, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram commencing at 10.00 am on 2026.06.24
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.


| Document Issuing/Purchasing Period | | | | | 2026.06.17 until 2026.06.30 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Pre-Bid Conference | | | | | At 10.00 A.M on 2026.06.24 | | | | | |
| Closing and Opening of Bids | | | | | At 10.00A.M on 2026.07.01 | | | | | |
| | | | | | | | | Required Bid Security | | |
| S No | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee | Validity Period days | Bid Validity Date | Bid Security Amount | Bid Security Validity Date | |
| 01 | Reconstruction of Kalvilan road NP/14/41(17)/02/SD/01/2026 | 3.147 | 60 Days | C9 & Above Roads | 3000.00 | 49 days | 19.08.2026 | 32,000.00 | 16.09.2026 | |
| 02 | Reconstruction of Yamalai road NP/14/41(17)/02/SD/02/2026 | 3.314 | 60 Days | C9 & Above Roads | 3000.00 | 49 days | 19.08.2026 | 34,000.00 | 16.09.2026 | |
| 03 | Renovation of Chankanai Vegetable Market, Construction of Causeway at Vannapuram sivan Kovil Road, Renovation of Araly sub office works & Renovation of Veemankamam road NP/14/41(17)/02/CF/07/2026 | 3.516 | 84 Days | C9 & Above Building & Roads | 3000.00 | 49 days | 19.08.2026 | 36,000.00 | 16.09.2026 | |
| 04 | Reconstruction of school road 1st lane & branch lane, Dutch west road 3rd lane, 4th lane & Construction of concrete road & Concrete causeway at Visuvanthanai kovil road branch lane NP/14/41(17)/02/CF/08/2026 | 9.428 | 84 Days | C8 & Above Roads | 3000.00 | 77 days | 16.09.2026 | 95,000.00 | 14.10.2026 | |
| 05 | Renovation of Cemmanathi road 1st lane & Branch Lane , Periyathampiran Kovil road NP/14/41(17)/02/CF/09/2026 | 6.212 | 84 Days | C8 & Above Roads | 3000.00 | 77 days | 16.09.2026 | 63,000.00 | 14.10.2026 | |

Chairman,
Local Authority Procurement Committee,
Valikamam West Pradeshiya Sabha,
Chulipuram.

17.06.2026

(CR/47689) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## செம்மணிப் புதைகுழிக்குள்...

செம்மணிப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 26ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன் போதே, புதைகுழிக்குள் இருந்து மேலும் 6 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன் 6 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. செம்மணிப் புதைகுழியில் இதுவரையான அகழ்வுப் பணிகளின் அடிப்படையில் 366 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 357 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள், துறைசார் நிபுணர்கள், ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி நிரஞ்சன் அகழ்வுப் பணிகளில் முன்னிலையாகி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)


## தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா ஆரம்பம்



முல்லைத்தீவு,ஜூன் 17

வரலாற்றுச் சிறப்புமிக்க, ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் 2026ஆம் ஆண்டுக்கான வருடாந்தத் திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை, கற்சிலைமடு பிள்ளையார் ஆலயத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு, பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மதியம் கொடியேற்றப்பட்டது. 16 நாள்கள் கொண்ட திருவிழாக்காலத் தில், எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 27ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரதோற்சவமும், 29ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும், பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-19)



## முன்னாள்...

களுக்கு சில தடுப்பூசிகள் ஏற்றப்பட்டதாகவும், முன்னாள் போராளிகளின் மர்மச் சாவுக்கு அந்தத் தடுப்பூசிகளே காரணம் என்றும் பரபரப்புக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, முன்னாள் போராளிகளின் சாவுக்கு அவர்களுக்கு ஏற்றப்பட்ட தடுப்பூசிதான் காரணமா என்று கண்டறியுமாறு கரைச்சி பிரதேசசபையின் உறுப்பினர்கள் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளனர். அந்தப் பிரேரணைக்கே சபை அனுமதி வழங்கியுள்ளது. (அ-ம-113)

## செம்மணிப்...

மறுதினம் செம்மணிப் புதைகுழிக்கு வரவுள்ளனர்.

செம்மணிப் புதைகுழியை நீதியமைச்சர் பார்வையிடுவதற்கு அனுமதி கோரி நீதிமன்றத்தில் நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு இன்றையதினம் அழைக்கப்படவுள்ளது. இதன்போது, நீதியமைச்சர் தலைமையிலான குழுவை அனுமதிப்பது தொடர்பான அறிவித்தலை நீதிமன்றம் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-26)

## யானை-...

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைவது உறுதி. அதில் எவ்வித மாற்றமும் இல்லை. கிராம மட்டத்தில் இரண்டு கட்சிகளும் ஏற்கனவே ஒன்றிணைந்து விட்டன. எனவே, ஒன்றிணைவு தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்.

திசைகாட்டி அரசாங்கத்தினர் அடுத்த தேர்தலில் நிச்சயம் தோல்வியடைவார்கள். இதனால் ஏற்பட்டுள்ள அச்சம் காரணமாகவே எதிர்வரும் 20 வருடங்களுக்கு தம்மிடமே ஆட்சியிருக்கும் என்று அவர்கள் கதைபரப்பி வருகின்றனர் - என்றார். (அ-ம)

## போதைப்பொருள்...

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அல்லைப்பிட்டி பகுதியில் ஐஸ் போதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவல்களுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. 44 வயதுடைய குறித்த சந்தேகநபர் அல்லைப்பிட்டி பகுதியில் நீண்டகாலமாக இடம்பெற்ற கால்நடைத் திருட்டுகளுடனும் தொடர்புடையவர் என்று பொலிஸார் கூறியுள்ளனர். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-23)

## அரசியலமைப்பு...

என திசைகாட்டி அரசாங்கம் கூறிவருகின்றது. ஆனால், அது நடக்குமா என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. பயங்கரவாதத்தை தடுப்பதற்கு புதிய சட்ட ஏற்பாடு அவசியம். ஆனால் தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டம்தொடர்பில் கடும்விமர்சனங்கள் உள்ளது. புதிய அரசியலமைப்பு மூலம் கொண்டுவரப்படும் எனக் கூறியே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் அதுபற்றி தற்போது கதைக்கப்படுவதில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் எனவும் கூறினர். அதற்குரிய ஏற்பாடும் இல்லை. உயர்நீதிமன்றத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்பட வேண்டும். இதற்குரிய ஏற்பாட்டை அரசாங்கம் தாமதப்படுத்துவது ஜனநாயக விரோதச் செயலாகும் - என்றார். (அ-ம-இ)

## யோஷிதவின்...

பணச்சுத்திகரிப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குக்கு எதிராக யோஷித ராஜபக்ச தாக்கல் செய்திருந்த மனுமீது எதிர்வரும் ஜூலை மாதம் கட்டளை வழங்கப்படவுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு நேற்றுடன் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. இதையடுத்தே, இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு ஜூலை மாதம் 3ஆம் திகதி வழங்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ-ம)

## புதிய...

பதே ராஜபக்சக்களின் எண்ணமாக உள்ளது என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்சக்கள் அடுத்த தலைமுறையிடம் கட்சியின் தலைமைத்துவத்தை ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளனர். மஹிந்த ராஜபக்ச, சமல் ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச, பஸில் ராஜபக்சஎன அனைவரும் இதே நிலைப்பாட்டில் உள்ளனர். இதனால்தான் நாங்கள் கட்சிக்கு புதிய அமைப்பாளர்களை நியமித்து வருகின்றோம் - என்றார். (அ-ம)

## சிவப்பிரகாச...

ம.பற்றிக் டிறஞ்சனால் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மேற்படி பாடசாலை அதிபர் ஆகியோருக்கு இது தொடர்பான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-66-26)

## கைது...

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை தற்போதைய அரசாங்கம் மிக விரைவாக முன்னெடுத்து வருகின்றது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் விசாரணை வளையத்தில் உள்ள நிலையில், கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக நீதிமன்றம் பயணத் தடைகளை விதித்திருந்தது. இவ்வாறான நிலையிலேயே, உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தான் கைது செய்யப்படுவதற்கு தடைவிதிக்கக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோத்தாபய ராஜபக்சரிட்மனு தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்டவர்கள் மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஊடகக்கற்கை பாட ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் விசேட செயலமர்வு!



யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும் அரசாங்கத் தகவல் திணைக்களமும் இணைந்து ஏற்பாடுசெய்த பாடசாலை ஊடகக்கழகங்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் மற்றும் தொடர்பாடலும் ஊடகக் கற்கைகளும் பாட ஆசிரியர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறையின் ஆய்வுகூடத்தில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.சிவகரன், கலந்துகொண்டு உரையாற்றுகையில், தற்போது AI தொழில்நுட்பத்தின் வளர்ச்சி சகல துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகிறது. இந்நிலையில் ஊடக விளங்கறிவு அவசியமானதொன்றாகும். இதுதொடர்பாக மாணவர்களுக்கு சரியான தெளிவூட்டலை ஆசிரியர்கள் வழங்கவேண்டும். ஒரு ஊடகத்தின் செயற்பாடானது வெறுமனே தனது வருமானத்தை அதிகரிப்பதை மட்டுமல்லாமல் சமூக நன்மையை கருத்திற்கொண்டு அதன் ஒவ்வொரு செயற்பாடுகளும் அமையவேண்டும். ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படும் செய்தி உண்மையானதா மாறாக அது AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உண்மைக்கு முரணாக எழுதப்பட்டுள்ளதா என்பதை பிரித்தறியும் நோக்கில் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தெளிவினை ஏற்படுத்தவேண்டும் - என்றார்.

நிகழ்வில் தொடர்ந்து அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே பண்டாரவின் விசேட உரை காணொளி ஊடாகப் பகிரப்பட்டது. தொடர்ந்து நவீன ஊடகப் போக்குகள், ஊடகப்பண்பாடு செல்நெறி மற்றும் ஊடகக்கற்கைகளின் தற்போதைய முக்கியத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவு ஆகிய எண்ணக்கருக்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறையின் பேராசிரியர் எஸ்.ரகுராம் விரிவுரையாற்றினார். ஊடக ஒழுங்குமுறை, ஊடக ஒழுங்குப்படுத்தலின் தேவை மற்றும் சமூக ஊடக அறிவு குறித்து ஊடகக்கற்கைகள் துறைத் தலைவர் திருமதி பூங்குழலி ஸ்ரீசங்கீர்த்தனன் விளக்கமளித்தார். செயலமர்வில் யாழ். பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறையில் விரிவுரையாளர்கள், மாவட்ட ஊடகப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்பாடலும் ஊடகக் கற்கைகளும் பாட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (ச)



மக்கள் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் 31ஆவது புத்தக அரங்க விழாவின் முதல் நாள் மாலை நிகழ்வு கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏழாலை மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது. (ஏ-41)

**கடை வாடகைக்கு தேவை**

ஸ்ரான்லி வீதி, பெட்றோல் செட் சந்தி - றக்கா றோட் சந்திக்குமிடையில் கடை வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 95 92 628

(CR 47694A)



பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் கல்விகற்கும் 650 மாணவர்களுக்கு தொழில்நுட்ப, இணையத்திறனை மேம்படுத்தும் பொருட்டு புதிய திறன் பலகை நேற்றுமுன்தினம்திங்கட்கிழமைசந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் கையளிக்கப்பட்டது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று புதிய திறன் பலகையைக் கல்லூரி நிர்வாகத்தினரிடம் வழங்கி வைத்தார். (ச-41-66)

தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சங்கானைப் பிரதேச மருத்துவமனைக்கு களவிஜயம் மேற்கொண்டார். இதன்போது மருத்துவமனையின் பொறுப்பதிகாரியைச் சந்தித்துக் கலந்துரையாடிய அவர் மருத்துவமனையின் தேவைகளையும், குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டார். (ச-66)



## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 12 . 1947

மறைவு 14 . 06 . 2026

**மாணிக்கம் நாகேஸ்வரி (மாரி)**

இந்தியாவை பிறப்பிடமாகவும், மணியந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் நாகேஸ்வரி அவர்கள் கடந்த (14.06.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனுஷ்கோடி - மகராசி தம்பதியரின் பாசமிகு மகளும், லதா (கனடா), ரதி (பிரான்ஸ்), நாகராசா (USA), தர்சினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற தயாளன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற குருசாமி, மற்றும் காமராசா, சுப்புலட்சுமி, காலஞ்சென்ற சாந்தி, மற்றும் இராஜராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், ரூபன், சதீஸ், காலஞ்சென்றவர்களான லதா, தெய்வேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிசாந்தன், லவ்சிகா, நிரேசன், மீரா, பானு, அபினு, அபிசன், டிலானி, மதியுகன், பமிலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சான்ரா, zanvi, யாஷனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.06.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.00 மணியளவில் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

இல் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
9ம் குறுக்கு, மணியம்தோட்டம், யாழ்ப்பாணம்.

(CS/61677) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ... 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org